# கோபுரம்



தகவல் இதழ்

பங்குனி, 1994

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு.

# இந்து அறநெறிக்கல்வி மாநாடு



கண்டியில் நடைபெற்ற இந்து அறநெறிக் கல்வி மாநாட்டினை முதலாம், மூன்றாம் தினங்களில் முறையே தவத்திரு சாந்தலிங்க அடிகளார் குருஜி, ஹரிதாஸ்கிரி சுவாமிகள் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்திற் காணலாம். இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ், திருமதி சௌந்தரா கைலாசம், இந்திய உதவித் தூதுவர் அ. கருப்பையா, கண்டி நகரபிதா, எட்மன்ட் பத்திரன, திணைக்கள பணிப்பாளர் க. சண்முகலிங்கம் ஆகியோரும் படத்திற் காணப்படுகின்றனர்.



# கோபுரம்

இந்துசமய, கலாசார
திணைக்கள வெளியீடு

மலர்: 5 ❋ 1994 ❋ இதழ்: 1
ஸ்ரீமுக வருடம், பங்குனி மாதம்

## எண்ணம்

கடந்த ஆண்டின் இறுதியில் கண்டி மாவட்டத்தின் ஏழு வலயங்களில் ஆன்மீக அறநெறி விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. அவ்வப் பிரதேச அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், ஆலயங்களின் நிர்வாக சபையினர் என பலதரப்பட்டோரும் இணைந்து விழாக்களை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆன்மீக விழாக்களின் முத்தாய்ப்பாக இந்து அறநெறிக் கல்வி மாநாடு கண்டியில் மூன்று தினங்கள் விமரிசையாக நடைபெற்றது. கோயம்புத்தூர், பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், இளைய பட்டம் மருதாசல அடிகளார், கவிக்குயில் சௌந்தரா கைலாசம் அம்மையார், தென்னாங்கூர் ஞானானந்த சேவாபீடத் தலைவர் குருஜீ ஹரிதாஸ்கிரி சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு மாநாட்டிற்குப் பெருமை சேர்த்தனர்.

இம்முறை அமைச்சின் அநுசரணையோடு பொங்கல் திருவிழா வவுனியாவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதற் தடவையாக, அமைச்சின் ஆதரவுடன், தமிழ் நாடக விழா கொழும்பில் நடைபெற்றது. ஜோன் டி. சில்வா கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் ஐந்து நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

இவ்விதழில் இவைபற்றிய செய்திகளுடன், வழமையான அம்சங்கள், ஆன்மீகக் கட்டுரைகள் என்பன இடம்பெறுகின்றன.

கோபுரம் வாசகர்கள் அனைவருக்கும் பிறக்கின்ற தமிழ்ப் புத்தாண்டான 'பவ' வருடம் அனைத்து நலன்களையும் அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்!

---

கோபுரம் இதழ்பற்றிய உங்கள் சிந்தனைகளைத் தொடர்ந்தும் எழுதி அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

முகவரி:-

**பணிப்பாளர்,**

இந்துசமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம்
''காப்புறுதி இல்லம்'' 9ம் மாடி,
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.

# இந்து அறநெறிக் கல்வி மாநாடு

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்த கண்டி மாவட்ட இந்து அறநெறிக் கல்வி மாநாடு ஜனவரி மாதம் 21, 22, 23ம் திகதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதல்நாள் 21ம் திகதி காலை கட்டுக்கலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் கணபதி ஹோமம் நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பமானது. ஆலய அறங்காவலர் சிவநெறிச்செம்மல் திரு. ஜி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற விசேட பூஜைகளில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், அமைச்சின் உயரதிகாரிகள் உட்பட கண்டி மாவட்ட இந்துப் பிரமுகர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் நிறுவனப் பிரதிநிதிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

தொடக்கவிழா மத்தியமாகாண இந்



அறநெறிக் கல்வி மாநாட்டில், முறையே இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி, மருதாசல அடிகளார், திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோர் உரை நிகழ்த்துவதைப் படத்திற் காணலாம்.

---

ஒழுக்கம் இன்றி, நீ ஆன்மீகப் பாதையில் அணுவளவும் முன்னேற முடியாது.



அறநெறிக் கல்வி மாநாட்டில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், கலந்து கொண்ட கூட்டத்தினரில், இராஜாங்கச் செயலாளர், திரு. கா. தயாபரன், உதவிப் பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் ஆகியோரையும் படத்திற் காணலாம்

கலாசார மண்டபத்தில் ஆரம்பமானது. இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் கோயம்புத்தூர் பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், தவத்திரு மருதாசல அடிகளார் கவிக்குயில் திருமதி சௌந்தரா கைலாசம், ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்த மகராஜ் கண்டி நகரபிதா திருவாளர் எட்மண்ட்பதிரன, கண்டி இந்திய உதவித்தூதுவர் திருவாளர் அ. கருப்பையா, இந்துசமயத் திணைக்களப் பணிப்பாளர் திருவாளர் க. சண்முகலிங்கம், இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருவாளர் கா. தயாபரன் மத்திய மாகாண இந்துமாமன்றத் தலைவர் திருவாளர் அ. துரைசாமிப்பிள்ளை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திருவாளர் பெ. இராமநாதன் ஆகியோர் உட்பட பெருந்திரளான பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

தீபாராதனைக்குப் பின்னர் தமிழ் மந்திர, வேதமந்திர நாதம் ஒலித்தது. திரு. அ. துரைசாமிப்பிள்ளை அவர்களின் வரவேற்புரையைத்தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், ஸ்ரீமத்சுவாமி ஆத்மகனாநந்த மகராஜ், திருமதி சௌந்தரா கைலாசம், தவத்திரு மருதாசல அடிகளார் உயர்திரு அ. கருப்பையா ஆகியோர் விழாவை வாழ்த்தி ஆசியுரை வழங்கினார்கள். கவிக்குயில் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் தமது ஆசியுரையுடன் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களுக்கு ''இறைநெறிக்காவலர்'' எனும் பட்டமளித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்.

அடுத்து கண்டி மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்

இணைந்து ஒழுங்கு செய்திருந்த ஆன்மீகக் கண்காட்சியை அனைவரும் பார்வையிட்டனர். கண்காட்சிக்கான ஏற்பாடுகளை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திருவாளர் பெ. இராமநாதன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

அன்று பிற்பகல் ஸ்ரீமத்சுவாமிஜி ஆத்மகனாநந்த மகராஜ் அவர்களின் அருளுரை, பஜனை, தியானம் என்பன இடம்பெற்றன.

கின. தவத்திரு சாந்தலிங்க இராசாமி அடிகளார், தவத்திரு மருதாசல அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். தொடர்ந்து நுவரெலிய காயத்திரி பீடம் தவத்திரு ஆர். கே. முருகேசு சுவாமிகள் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், பிரதிப் பணிப்பாளர்



குருஜி ஹரிதாஸ்கிரி சுவாமிகள் தமது குழுவினருடன் உபந்நியாசம் செய்வதையும், கூட்டத்தினரில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், இந்திய உதவித் தூதுவர் திரு அ. கருப்பையா, திருமதி. சௌந்தராகைலாசம், திருமதி தேவராஜ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்திற் காணலாம்.

அதனை தொடர்ந்து புலவர் கா. சிவானந்தன், பண்ணிசைப்பாவலர் பி. வி. இராமன் இருவரும் இணைந்து வழங்கிய ''தமிழோடு இசைபாடல்'' நிகழ்ச்சி இடம்பெற்றது.

## இரண்டாம் நாள் விழா

இரண்டாம் நாள் அமர்வுகள் திருத்துவ கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமா

திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் மாநாட்டின் நோக்கம் குறித்து சிறப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து திருமதி ஷாமினி இராமநாதன் குழுவினர், திருமதி சுலோஜனா பாலசுப்பிரமணியம் குழுவினர் ஆகியோர் பக்தி இசைவிருந்து நிகழ்ச்சி அளித்தனர். கவிஞர் பரமநாதன் ''திருவாசகத்தேன்'' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

இலட்சியங்கள், நம்மை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

சிந்தனை நின்தனக்கு ஆக்கி
நாயினேன் தன்
கண்ணிணை நின் திருப்பாதப்
போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி
வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி
ஐம்புலன்கள் ஆர வந்தனை!
ஆட்கொண்டுள்ளே புகுந்த
இச்சை மாலமுதப் பெருங்கடலே
மலையே உன்னைத் தந்தனை
செந்தாமரைக் காடு
அனைய மேனித் தனிச்சுடரே
இரண்டுமிலித் தனிய னேற்கே!

திருவாசகம்
**மாணிக்கவாசக சுவாமிகள்**

பிற்பகல் அமர்வின் போது அறநெறி மாணவர்களின் ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அறநெறிக்கல்வி என்னும் வில்லிசையும் இடம்பெற்றது. அன்றைய தினம் விழாவைச் சிறப்பித்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தவத்திரு மருதாசல அடிகளார், திருமதி சௌந்தரா கைலாசம், உயர்திரு அ. கருப்பையா ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.


அவ்வாறே கண்டிப்பிரதேச பிரமுகர்களான திரு. அ. துரைசாமிப்பிள்ளை' திரு. எஸ். தேசோமயானந்தம், திரு. பெ இராமநாதன், திரு. எஸ். செல்லமுத்து திரு. வி பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்

நிகழ்ச்சி நிறைவில் ''நாம் இறை வணக்கம் செய்வது பக்தியினாலா? பயத்.



அறநெறி மாநாட்டில் நடைபெற்ற ஆன்மீக உடைப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களையும், கூட்டத்தினரில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், திருமதி. தேவராஜ், உதவிப் பணிப்பாளர், திரு. குமார்வடிவேல் ஆகியோரையும் படத்திற் காணலாம்.

சிறிதளவு எரிச்சலும் கோபமும்கூட மனதை ஊறுபடுத்துகின்றன.



அறநெறிக் கல்வி மாநாட்டில் திரு. திருமதி இராமநாதன் குழுவினர் இசைக்கச்சேரி நிகழ்த்துவதையும், கூட்டத்தினரில் மருதாசல அடிகளார், உதவிப் பணிப்பாளர்கள் வி. விக்கிரமராஜா, குமார்வடிவேல் ,ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்திற் காணலாம்.

தினாலா?'' என்னும் தலைப்பில் ஆன்மீகப் பட்டிமன்றம் நடைபெற்றது. கண்டி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். தேசோமயாநந்தம் அவர்களின் தலைமையில் பக்தி எனும் பொருள் பற்றி திரு. செ. நடராசா, கமலினி நமசிவாயம், திரு.ந. பார்த்திபன் ஆகியோர் வாதிட்டனர். ''பயம்'' எனும் பொருள்பற்றி திருமதி லலிதா நடராஜா, திருமதி நளாயினி சுப்பையா, திருமதி நவம் வெள்ளைச்சாமி ஆகியோர் வாதம் புரிந்தனர். அத்துடன் இரண்டாவதுநாள் விழா நிறைவுற்றது!

## நிறைவுநாள் விழா


மூன்றாம் நாள் காலை திருத்துவக் கல்லூரி மண்டபத்தில் விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக குருஜி ஹரிதாஸ்கிரி சுவாமிகளின் சங்கீத உபந்நியாசம் நடைபெற்றது. திரளான இந்துமக்கள் கலந்து குருஜீ சுவாமிகளின் சங்கீதக்கச்சேரியையும் பஜனையையும் கேட்டு மகிழ்ந்தனர்.

சூரியன் உலகுக்கு எவ்வளவோ வகையில் உதவி செய்கின்றான். மரங்கள் வளரச் செய்வதும், கடல் பயிர்கள் செழித்து உணவு தானியங்கள் விளையச் செய்வதும், கடல் நீரை ஆவியாக்கித் திரும்பவும் மழையாகப் பொழியச் செய்வதும். எல்லாம் சூரியனின் செயலே. ஆயினும் ஓய்ச்சல் ஒழிவின்றி இயங்கி வருகின்றான். கருமமே கண்ணாயினார் என்ற வகையில் கடமையை ஆற்றி வருகிறான். அரைநாள் சூரியன் இல்லையென்றால் உலகமே ஸ்தம்பித்துவிடும் என்பதை உணர வேண்டும்.

அவ்வாறே உங்கள் கடமைகளைத் தெய்வார்ப் பணமாக, தெய்வத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டே செய்திடுங்கள். யௌவனத்தினால் கர்வப்படுவதும், முதுமையைக் கண்டு கலங்குவதும், மரணத்திற்குப் பயப்படுவதும் கூடாது. இவை யாவும் சரீரத்தைப் பற்றியவையே. இவை தவிர்க்க முடியாதவை.

சுவாமி சித்பவானந்தர்

அன்பான சொற்கள் விலைமதிப்பற்றவை.



அறநெறிக் கல்வி மாநாட்டில் செல்வன் அ. துளசிதாசன் தமது குழுவினருடன் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடத்துவதைப் படத்தில் காணலாம்.

ஹரிதாஸ்கிரி சுவாமிகள், இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் இலங்கையில் ஆற்றி வரும் சமயப் பணிகளை வாழ்த்தி "இந்துசமய சேவாதிலகம்'' எனும் பட்டமளித்ததோடு பொன்னாடையும் போர்த்தி வாழ்த்தினார்.

அவ்வாறே அமைச்சர் அவர்கள் முன்னிலையில் கண்டி இந்து மாமன்றத் தலைவர் திரு. அ. துரைசாமிப்பிள்ளை அவர்களும், செல்வவிநாயகர் ஆலய அறங்காவலர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ஹரிதாஸ்கிரி சுவாமிகளுக்கு மாலை யிட்டு, பொன்னாடை போர்த்தி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.

மாநாட்டின் மூன்றுதின நிகழ்ச்சிகளும் கண்டியில் பக்திப் பெருவெள்ளம் பிரவகித்துப் பெருக வழிசமைத்தன. கலந்து கொண்ட அனைவர் மனமும் நிறைவும், தெய்வீகமும் நிறையச் செய்தன.

மூன்றுதின நிகழ்ச்சிகளையும் செல்வி கவிதா தில்லைநாதன் அவர்கள் மிகச் சிறப்பாகத் தொகுத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு: **இராஜேஸ்வரி முத்துசாமி**
- கலாசார அலுவலர் -

தங்கத்தினால் நகை செய்ய அதைக் காய்ச்சி, தட்டி, நீட்டி, வளைத்துத்தான் அழகிய வளையலோ சங்கிலியோ, மோதிரமோ உருவாக்க முடியும். ஆகவே நீங்களும் தங்கத்தைப் போல் சோதனைகளுக்கு உட்பட வேண்டியது அவசியமே. இவைகளால்தான் உங்களது திறமை பளிச்சிடும்; ஆனந்தம் கிட்டும். அதனால்தான் நான் அவ்வப்போது உங்களை 'பங்காரு' (தங்கம்) என்று அழைக்கிறேன்!

ஸ்ரீ சத்திய சாயி பாபா

முறையான தியானப் பயிற்சியின் மூலம் தெய்வீக குணங்கள் பெருக்கெடுக்கும்.

# ஆன்மீக அறநெறி விழாக்கள்

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு கண்டி இந்து அறநெறி மாநாட்டுக்கு முன்னோடியாக ஏழு வலயங்களில் ஆன்மீக அறநெறி விழாக்களை நடத்தியது. ஒவ்வொரு வலயத்திலும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், ஆலய அறங்காவலர்கள், பிரமுகர்கள், மாணவர்கள், இந்து நிறுவனப் பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு விழாக்களைச் சிறப்பித்தனர்.

**புசல்லாவ**

புசல்லாவ வலய ஆன்மீக அறநெறி விழா நவம்பர் மாதம் 20ம் திகதி புசல்லாவ சி. சி. தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இவ் விழாவில் ஆன்மீகக் கண்காட்சி, வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகனாந்தாஜி அவர்களின் பஜனை, அருளுரை, தியானம் என்பன இடம்பெற்றன. பிரதேச அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பங்குகொண்ட ஆன்மீக உடைப் போட்டி, வில்லுப்பாட்டு, நாடகம், என்பவற்றை தொடர்ந்து தமிழ்நாடு இன்னிசைச் செல்வி திருமதி குன்னக்குடி பாலா அவர்களின் காவடிச் சிந்து பக்தி இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

புசல்லாவ இந்து இளைஞர் மன்றம், இந்து கலாசார பேரவை, சி. சி. தமிழ் வித்தியாலயம் என்பன இணைந்து விழாவையும் கண்காட்சியையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**கலஹா**

கலஹா வலய விழா நவம்பர் 21ம் திகதி தமிழ் மகாவித்தியாலத்தில் நடைபெற்றது. இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இவ்விழாவில் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி அவர்கள் அருளுரை நிகழ்த்தியதோடு பஜனை, கூட்டுப் பிரார்த்தனை என்பனவற்றையும் நிகழ்த்தினார்.

சிறப்பம்சமாக ஆன்மீக உடைப் போட்டி, கோலப் போட்டி, ஆன்மீகக் கண்காட்சி என்பன இடம் பெற்றன.

நிகழ்ச்சியின் நிறைவம்சமாக திருமதி குன்னக்குடி பாலா அவர்களின் காவடிச் சிந்து இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

கலஹா இந்து இளைஞர் மன்றம், தமிழ் மகாவித்தியாலயம், தெல்தொட்ட தமிழ் மகாவித்தியாலயம் என்பன இணைந்து விழாவை ஒழுங்கு செய்திருந்தன.

> இறைவனின் திருப்திக்காகவே எதையும் செய்யும் பாவனை வேண்டும். இல்லாவிடில் யாவும் வீணே. 'நிஷ்காம்யகர்மம்' என்ற பயன் எதிர்நோக்காத பணியினைத் தியாகத்தின் அடிப்படையில் செய்திடுங்கள் அப்போதுதான் அமைதி கிட்டும். ஒருமைப்பாட்டுணர்வு வளரும்.
>
> ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

ஆன்மீக வாழ்க்கை மிகவும் கடினமானது.

### பன்விலை

பன்விலை வலய விழா டிசம்பர் மாதம் ...ம் திகதி விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இவ் விழாவில் பண்ணிசைப் பாவலர் பி. வி, இராமன் அவர்களின் இசை நிகழ்ச்சி, பஜனை என்பன இடம் பெற்றன. விழாவில் திருமதி குன்னக்குடி பாலா குழுவினரின் காவடிச் சிந்து இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பன்விலை ஸ்ரீ செல்வவிநாயர் ஆலய பரிபாலன சபை, விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம், ஆத்தலை தமிழ் மகாவித்தியாலயம் என்பன இணைந்து விழாவை ஒழுங்கு செய்திருந்தன.

கூவின பூங்குயில்! கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்:
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
யாவரும் அறிவரி யாய்; எமக் கெளியாய்;
எம்பெரு மான்; பள்ளி எழுந்தருளாயே!

மகா தேவா! திருப்பெருந்துறையுறை சிவபெருமானே! எவராலும் அறிதற்கு அரியவனே! எங்களுக்கு, அறிந்து அனுபவித்தற்கு எளிமையானவனே! அழகிய குயில்கள் கூவின; கோழிகள் கூவின; பறவைகள் ஒலித்தன; சங்குகள் முரன்றன; விண்மீன்கள் ஒளி குன்றின. உதயக் கதிரொளி தோன்றுகிறது. எம்பெருமானே, பள்ளியினின்றும் எழுந் தருள்வாயாக! திருவுள்ளத்தில், விருப்பம் கொண்டு எங்களுக்கு நல்ல வீரக் கழல் அணிந்த உன் திருவடி இரண்டினையும் காட்டுவாயாக!

-மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்சி-

### நாவலப்பிட்டி

நாவலப்பிட்டி வலய அறநெறி விழா டிசம்பர் 11 ம் திகதி தமிழ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகனாந்தாஜி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பஜனை, பிரார்த்தனை என்பவற்றை நடத்தினார்.

பிரதேச அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் பஜனை, மாணவர்களின் ஆன்மீக உடைப் போட்டி, தத்துவ முத்துக்கள் போட்டி என்பன நடைபெற்றன.

நாவலப்பிட்டி பிரதேச தேசிகர்கள் மிகச் சிறப்பான ஆன்மீகக் கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர்.

### இரஜவெல

இரஜவெலப் பிரதேச அறநெறி விழா டிசம்பர் மாதம் 12 ம் திகதி இரஜவெல தமிழ் மகாவித்தியாலத்தில் அதிபர் கே. சுப்பையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆன்மீக அருளுரை, பஜனை, தியானம் என்பவற்றை நடத்தினார். அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள், ஆன்மீகக் கண்

அறிவும் தெளிவும் பெருகும்போது பயம் அகன்று போகும்.

காட்சி, ஆன்மீக உடைப் போட்டி என்பனவும் நடைபெற்றன.

**கம்பளை**

கம்பளை பிரதேச அறநெறி விழா டிசம்பர் மாதம் 12ம் திகதி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தமிழ் மகாவித்தியாலத்தில் அதிபர் திரு ப. பரமேஸ்வர சர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இவ்விழாவில் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தாஜி அவர்களின் ஆன்மீக அருளுரை, பஜனை, தியானம் என்பன நடைபெற்றன.

அருட்கலைத் திலகம் மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் பக்திக் கதைகள் கூறினார். மாணவர்களது ஆன்மீக உடைப் போட்டி, ஆன்மீகக் கண்காட்சி என்பன இடம் பெற்றன.

இராஜாங்க அமைச்சின் அனுசரணையுடன் கம்பளை இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை விழாவை ஒழுங்கு செய்திருந்தது.

**கண்டி**

கண்டி வலய அறநெறி விழா டிசம்பர் மாதம் 19ம் திகதி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய மீனாட்சி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

திருமதி சுலோஜனா பாலசுப்பிரமணியம் அவர்களின் பஜனை, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்ட பட்டி மன்றம், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆன்மீகக் கண் காட்சி, ஆன்மீக உடைப் போட்டி என்பன இடம் பெற்றன. சிறப்பு நிகழ்ச்சியாக மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் நிகழ்த்திய ஆன்மீகக் கதை கூறல் நடைபெற்றது.

ஏழு வலயங்களிலும் நடைபெற்ற இவ் வறநெறி விழாக்கள் கண்டி மாவட்டத்து இந்து மக்களிடையே ஆன்மீக மறுமலர்ச்சியையும், சமய விழிப்புணர்வையும் உணர்த்துவதில் பெரும்பங்கு வகித்தன. மாணவரிடையே நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகள் அவர்களுக்கு சமயதத்துவங் களை அறியச் செய்தன. பல தரத்தினரும் இணைந்து பணி செய்ததன் மூலம் நல்லி ணக்கமும் அன்பும் பெருகின.

ஆன்மிக உடைப் போட்டிகளில் இறைவனின் வடிவங்களையும் சமயகுரவர், ஆழ்வார் வடிவங்களையும் கண்டு மகிழ்ந் தோம் கண் காட்சிகள் நமது சமயதத்துவங் களின் ஆழத்தை உணர்த்தி வைத்தன.

இந்த விழாக்களின் பின்னணியில் இருந்து பணி செய்த இந்து சமய கலா சாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார்வடிவேல், கலாசார உத்தி யோகத்தர்கள் திரு மாத்தளை பி. வடி வேலன், செல்வி இராஜேஸ்வரி முத்து சாமி ஆகியோரையும் அவ்வப் பிரதேச விழாக் குழுவினரையும் எத்தனை பாராட் டினாலும் தகும்.

தொகுப்பு: வே. அமிர்தலிங்கம்
தலைவர் - சுவாமி விபுலாநந்தர்
அறநெறிப் பாடசாலை - புஸல்லாவ

---

எந்த மதத்தையும் நிந்திக்காதீர்கள்; எவரையும் வெறுக்காதீர்கள். எல்லா மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு பாதைகளே. ஆத்மதத்துவம் எல்லோருக்கும் ஒன்றே. இதன் அடிப்படையில் தெய்வத்தை அடைய முயலுங்கள். பிரேமையே தெய்வம். எல்லாம் அன்பு மயமே.

-சுவாமி சிவானந்தர்

---

இறைவனுக்கு உங்கள் மனதைத் தந்துவிட்டால் உங்களுக்கு இருதயநோய் வராது.

# வவுனியாவில் பொங்கல் விழா

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சு ஏற்பாடு செய்திருந்த தைப் பொங்கல் விழா இம்முறை வவுனியாவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பொங்கலன்று காலை வவுனியா குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் விசேட பூசையும் பொங்கலும் இடம்பெற்றன. அன்று பிற்பகல் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் கலையரங்கு, கருத்தரங்கு, கவியரங்கு என்பன இடம்பெற்றன. இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகவும், கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

வவுனியா அரச அதிபர் திரு. எஸ் தில்லை நடராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற பிற்பகல் நிகழ்ச்சிகளில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல்



வவுனியா விழாவிற்கு வருகை தந்த கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலந்திரன், இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், வவுனியா அரச அதிபர் தில்லைநடராஜா ஆகியோரை பெண்கள் மங்கள ஆராத்தி செய்து வரவேற்பதைப் படத்திற் காணலாம்.

கடவுள் நம்பிக்கை என்பதற்கு இன்னொரு பொருள் அச்சமின்மை.



பொங்கல்விழா கவியரங்கில் கவிஞர் அகளங்கன் கவிதை வாசிப்பதையும் ஏனைய கவிஞர்களுடன், இராஜாங்க அமைச்சர்கள் இராஜமனோகரி புலந்திரன், பி. பி. தேவராஜ், அரச அதிபர் தில்லை நடராஜா, திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முலிங்கம் ஆகியோரையும் படத்திற் காணலாம்.

அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து வானொலி தொலைக்காட்சி கலைஞரான திருமதி, வனஜா ஸ்ரீனிவாசன் அவர்களின் இசைக் கச்சேரி இடம் பெற்றது இந் நிகழ்ச்சிக்கு இரவீந்திரன் அச்சுதன், கமலா அச்சுதன் ஆகியோர் பக்க வாத்தியம் வழங்கினர்'

''புது வாழ்வு தோன்றட்டும்'' என்னும் தலைப்பில் இடம் பெற்ற கவியரங்கில் திரு. அகளங்கள், கவிஞர் கருணாகரன், செல்வி நிறைமதி, திரு. செந்தில் குமரன், திரு. மகேஸ்வரராஜா, திருமதி மங்களராணி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு கவிதை வாசித்தனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திரு. க சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர் திரு. ஏ எம். நஹியா (தமிழ் அலுவல்கள்) ஆகியோர் கருத்தரங்கு நிகழ்ச்சியில் சிறப்புரை வழங்கினர்.

பூந்தோட்டம் இளைஞர் எழுச்சிக் கழகம் வழங்கிய ''கோரதாண்டவம்'' வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்கள் வழங்கிய 'நவீன சத்திர சிகிச்சை'' ஆகிய நாடகங்கள் கலையரங்கு நிகழ்ச்சியைச் சிறப்பித்தன.

கலாசார உத்தியோகத்தர் திருமதி. ஜெ. தெய்வேந்திரன் அவர்களுடைய நன்றி உரையுடன் பொங்கல் விழா இனிது நிறைவு பெற்றது.

இப் பொங்கல் விழாவை இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சின் அநுசரணையோடு வவுனியா மாவட்டச் செயலக விழாக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உனது முயற்சியில் தடைகள் ஏற்படுவது அழுவதற்காக அல்ல, மீண்டும் முயல்வதற்காக.

# சமய உணர்வை வளர்ப்போமாக!

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

இலங்கை என்ற இந்த அழகிய நாடு பழம்பெருமைமிக்கது. அருட்துறவியர்களாலும் தமிழ் அறிஞர்களாலும் சிறப்புப் பெற்றது. ஆறுமுகநாவலர் தோன்றி தமிழகத்திலும் தமது சைவத்தமிழ்ப்பணிகளைப் பரப்பினார். சைவத்தால் சிறந்த இந்த நாட்டில் இன்று நடைபெறும் அறநெறி மாநாடு கண்டு நாம் மிக்க பெருமை கொள்கிறோம். இளைய சமுதாயம் அறநெறியில் செழுமையுற இந்த மாநாடு வழி வகுக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

நாம் சமய அறிவைப் பெறுவதை விடவும் சமய உணர்வைப் பெறுவதைப் பெரும்பேறாகக் கொள்ள வேண்டும். சமய சின்னங்களை அணிவதை எமது முன்னோர்கள் ஆன்மீக உணர்வின் அடித்தளமாகக் கருதினார்கள். அப்பர் பெருமான் நமககு எளிமையான ஒரு வழியைக் காட்டி உதவியுள்ளார்.

கற்றவர் கல்லாதவர், இளையவர் முதியவர், செல்வர் வறியர் எவராக இருப்பினும், திருநீறு பூசியவர்களாகவும் சிவ சின்னங்களை அணிந்தவர்களாகவும் இருப்பார்களே ஆனால் அவர்கள் திருக்கூட்டத்தினர். அவர்களுக்கு பணிந்து வாழ்வதும் அந்தக் கூட்டத்தில் ஒருவராக எம்மை மாற்றிக் கொள்வதும் சமய நெறி. அந்த நெறியிலே நம்மை இட்டுக் கொள்ளும் போது ஆன்மீக உணர்வு நெஞ்சிலே பொங்கும்.

எவரேனுந் தாமாக இலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டால்
உள்கி,
உவராதே அவரவரைக் கண்டபோது
உகந்து அடிமைத்திற நினைந்து
அங்குவந்துநோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று
சொல்லி
இரண்டாட்டாது ஒழிந்து ஈசன்
திறமே பேணி
கவராதே தொழுமடியார் நெஞ்சின்
உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக்
காணலாமே!

என்ற அப்பர் சுவாமிகளின் தேவாரப் பாடல் நமக்கு ஒரு பெரும் உண்மையை உணர்த்துகின்றது.

நமது சமுதாயத்திலுள்ள பெருஞ் சிக்கலே ஏற்றத் தாழ்வுகளால் நமது சமு

சோதனைகளைக் கண்டு மனந் தளராமல் உறுதியுடன் வாழ்க்கைப் போராட்டத்தில் முன்னேற வேண்டும். ஓர் இரும்புக் குண்டும், காய்ந்த இலைச் சருகும் ஓர் இடத்தில் சேர்ந்திருக்கும் போது பெருங்காற்று வந்தால் சருகு பறந்துவிடும். இரும்புக் குண்டு நகராது. உங்களுடைய மனோ திடம் இரும்புக் குண்டு போல் இருத்தல் வேண்டும். தியானம் புரிந்தால்தான் உறுதி கிட்டும்.

ஸ்ரீ சத்திய சாயி பாபா

மனதை சமநிலையில் வைத்துக்கொள்வது மகிழ்ச்சிக்கு அத்திவாரம் ஆகும்.

தாயத்தைப் பிரித்து வைத்திருப்பதுதான். வேற்றுமை உணர்வுகளையும், கசப்புணர்வுகளையும் நாம் மறந்துவிட்டு அனைவரிலும் இறைவனைக் கண்டு போற்ற வேண்டும். வள்ளலார் கூறுவதுபோல உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத மனத்திறம் வளர வேண்டும் என்கிறார் அப்பர் அடிகள். அதுவே சமயப் பொதுமை; அதுவே ஆன்மீகப் பண்பாடு. இந்த உணர்வினால் மனிதகுலம் தழைக்கும் என்று உணர்த்துகின்றார்.

சிவ நெறியைப் பின்பற்றுபவர்கள் கற்றவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அன்புணர்வு நெஞ்சிலே பொங்கும் போது கருணை பெருகும் என்பதைக் காட்டுவதே நமது வரலாற்றுச் செந்நெறி. நமது வழிபாட்டில் சமய ஒழுகலாறுகளுக்கியைந்தவாறு சிவசின்னங்களை அணிவது மிகவும் புனிதமான கடமை, திருநீறு நமது வினைகளைப் பொசுக்கிவிடும்.

'நமசிவாய' என்ற மந்திரமோதி நீறு அணிவோமானால் வாழ்வு சிறக்கும். வேண்டியன வேண்டியாங்கு எய்துவோம். இந்த ஐந்தெழுத்தை ஓதும் முறையை நமது அருளாளர்களுள் ஒருவரான ஞானசம்பந்தப் பெருமான் மிக அழகாகப் பாடி உணர்த்தி அருளினார்.

> காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
> ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
> வேதம் நான்கினும் மெய்ப்பொரு
> ளாவது
> நாதன் நாமம் நமச்சிவாயவே!

என்பது அவரது தேவாரப்பாடல் 'ஓதுவது' என்றால் திரும்பத் திரும்ப பலமுறை சொல்லுதல் என்று பொருள்; அதனையும் உள்ளம் நெகிழச் சொல்ல வேண்டும்; கண்ணீர் மல்கச் சொல்ல வேண்டும்.

> இளமைப் பருவத்தைப் பொற்காலமாகக் கருதி பெற்றோருக்கும் பிறருக்கும் சேவை செய்து, வாழ்க்கையை தெய்வத்துவம் நிறைந்ததாகச் செய்து கொள்ளுங்கள்.
>
> பாபா முக்தானந்தா

ஐந்தெழுத்து வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது. ஆழ்ந்து அகன்ற நுண்ணியனான இறைவனை அறியச்செய்வது ஐந்தெழுத்து. இறைவனை அகண்டாகார சச்சிதானந்தம் என நமது மறை நூல்கள் குறிப்பிடுகின்றன. எட்டமுடியாத அந்தப் பரம்பொருளை ஐந்தெழுத்து எட்டவைத்துவிடும் என அப்பரும் சம்பந்தரும் அருளிச் செய்தார்கள்.

ஐந்தெழுத்து கல்லிலே கட்டி கடலிலே விட்ட நாவுக்கரசரைக் கரையேற்றியது "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயவே" எனப் பாடியே அருள் பெற்றவர் அப்பர். ஐந்தெழுத்து அப்பரை மட்டும் காக்கவில்லை, அது நம் அனைவரையும் காக்க வல்லது என்கிறார் சேக்கிழார். நாம் பிறவிப் பெருங்கடலில் மூழ்கிக் கிடக்கின்றோம். நல்வினை, தீவினை ஆகிய கயிறுகள் மும்மலங்கள் என்ற கல்லிலே நம்மைப் பிணைத்துள்ளன. நாம் இந்தத் தடையிலிருந்து விடுபட இலகுவான வழி நீறணிந்து ஐந்தெழுத்தோதி இறைவனைப் பணிவதுதான். அந்த அருள்நெறியிலே அனைவரும் உய்வோமாக!

(கண்டியில் நடைபெற்ற இந்து அறநெறிக் கல்வி மாநாட்டுச் சிறப்புரையின் ஒரு பகுதி)

தொகுப்பு; — அன்புச்செல்வன்

**கடுமையான சோதனையையும் மகிழ்ச்சியோடு எதிர்கொள்ளும் மனிதன் உன்னதமானவன்!**

வாழ்வியற் சிந்தனை

# இளைய உள்ளத்தில் ஆன்மீகம்!

பத்மா. சோமகாந்தன்

ஆலம் விதை சிறியது; மிக மிகச் சிறியது. அவ்வித்து வளர்ச்சி பெற்று பரந்து பூரண விருட்சமாகி விட்டால் அதன் பிரமாண்டமான தோற்றம் எம்மைத் திகைக்க வைக்கிறது. அதன் பயனும் அளவிடற்கரியது. அதேபோல குழந்தைகளின் உள்ளத்தில் சிறு பொறி சிந்தனை தூண்டப்பெற்று விட்டால், ஒளி யேற்றப்பட்டு விட்டால், அதன் பலனை இவ்வையகம் முழுதுமே ஆனந்தமாக அனுபவிக்கும், குழந்தையிலேயே இத்தகைய ஒளியேற்றப்பட்டவர்களே ரமணர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்ற மகான்கள். இளமையிலேயே இறையருள் பாலித்ததன் காரணமாக பல யுக புருஷர்கள் இவ்வையகத்தில் தோன்றி இவ்வையகம் உய்ய வழி காட்டியுள்ளனர். இத்தயை உயர்ந்த நிலையிலே யோகிகளாகவும் ஞானிகளாகவும் எமது பிள்ளைகள் பிறப்பெடுத்துவிட வேண்டுமென நாம் அவாவுறாவிடினும் ஒழுங்காக சத்தியத்தை ஓரளவாவதும் கடைப்பிடித்து வாழ / நெறிப்படுத்தவேண்டியது ஒவ்வொரு பெற்றோருடைய, ஆசிரியர்களுடைய பிரதானமான கடமை யென்பதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

எல்லாச் சமயங்களுமே ''இறைவன் ஒருவன் உள்ளான்'' அன்பும் சத்தியமும் ஒழுக்கமும் வாழ்வின் குறிக்கோளாக அமைய வேண்டும்'' என்பதையும் வற்புறுத்துகின்றன, நாம் பாடசாலைக்குச் செல்கிறோமெனில் நடந்தும், காரிலும், சைக்கிளிலும், பஸ்ஸிலும், ரெயிலிலும், பயணம் செய்தாலும் நாம் அடையும் இடம் ஒன்றேதான். அதேபோல பல்வேறு விதிமுறைகளைக் கையாண்டாலும் நாம் அடைய வேண்டிய நமது நோக்கம் ஒன்றாகவேதான் இருக்கிறது. இவற்றை நாம் நன்கு உணர்ந்து கொண்டால் மாசு மறுவற்ற பிஞ்சு உள்ளம் கொண்ட குழந்தைகளின் உள்ளத்திலே, வாழைப்பழத்திலே ஊசி ஏற்றுவதுபோல பொதுவாக கடவுள் பத்தியை, இறை உணர்வை பதித்து விட முடியும். வேடிக்கைகளிலும் கேளிக்கைகளிலும் மனதை ஈடுபடுத்தும் தன்மை குழந்தைகளுக்கு இயல்பாகவே உண்டு. எனவே சாஸ்திரோர்த்தமாக சம்பிரதாயமாக நடைபெறும் பண்டிகைகள், விழாக்கள், கொண்டாட்டங்கள் மூலம் அவர்களின் மனதைச் சமய விடயங்களில் பதியச் செய்யலாம். கோவில்களிலே நடைபெறும் தூப தீப ஆராதனைகள், பூஜைகள், பாவனைகள், உபசாரங்கள் போன்றவற்றைக் குழந்தைகள் நன்கு அவதானிக்கச் செய்ய வேண்டும். வெளிச்சம் இருக்கும் பகல் வேளைகளிலே தீவட்டி பிடித்து சுவாமியை வீதிவலம் செய்தல் கோவில் உள் மண்டபங்களில் ஓடுகளினால் வேயப்பெற்ற குடை, ஆலவட்டங்களோடு சுவாமி ஊர்வலம் வருதல் ஏன் என்பதை விளக்கியும், எழுந்தருளி சுவாமியின் அணிமணி அலங்காரங்கள் பட்டாடைகள் இவற்றையெல்லாம் குழந்தைகள் கவர்ச்சிகரமாக வைத்த கண் வாங்காமல் பார்த்து இன்புறுவர். இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் சுதந்திரமாக அவர்களை அவதானிக்க விடுவதோடு அறிவான சிந்தனைக்கேற்ற விளக்கங்களை

மனதில் கட்டுப்பாடு பெருகப்பெருக வெற்றிகளும் பெருகும்.

யும் பெற்றுக்கொள்வதால் இப்பாவனை பண்டிகைகள் மீது அவர்களுக்கு தம்மை யறியாமலே ஒரு பற்றும் பக்தியும் ஏற்படு கின்றது. ''செயல்கள் யாவும் நோக்கமுடை யன'' என்ற அகநூல் சித்தாந்தத்தினைப் போல் எமது சமயத்தின் செயற்பாடுகளி லும் ஒவ்வொரு ஆழமான அர்த்தமுண்டு; எனினும் அதன் ஆழத்தை உணராவிடி னும் மேலெழுந்த வாரியாக அறிந்திருப்பது அறிவு வளர்ச்சிக்கும் ஏதுவாயிருப்பதோடு சமய சம்ஸ்காரங்களில் ஈடுபாடும் பற்றும் ஏற்படும்.

## திருக்கோயிலை வலம்வரும் முறை

கோயிலுக்குள் நுழைந்த உடன் கொடி மரம், பலிபீடத்தைத் தாண்டி, நந்திக்குப் பின்புறம் நின்று, அவரது இரண்டு கொம்புகளின் ஊடே சிவ லிங்கத் தரிசனம் செய்ய வேண்டும், அதன் பிறகு கருவறையின் முன்னே நின்று தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, திருச்சுற்றில் வலம் வர வேண்டும். வலம் வருகையில் முதலில் விநாயகரையும் தட்சிணாமூர்த்தியை யும், லிங்கோற்பவரையும், பிரம்மா வையும், துர்க்கையையும் தரிசித்து, வளைந்து சென்று சண்டேசுவர ரைத் தரிசித்து, மீண்டும் திருச்சுற்றில் சேர்ந்து, துவாரத்தின் வழியே நேரே கொடி மரத்தை அணுகித் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு அங்கே தரையில் அங்கங்கள் பொருந்தக் கீழே விழுந்து வணங்க வேண்டும்; இப்படிச் செய்யும் பொழுது நாமே அறியாத வகையில் ஓங்காரப் பாதை யில் செல்லுகின்றோம். மந்திரத்தால் மட்டுமன்றிச் செய்கையாலும் ஓங் காரச் சிந்தனையில் கோயிலைச் சுற்றுகிறோம்.

உதாரணமாகச் சூரன்போர், முருக னின் திருக்கல்யாணம் போன்ற திரு விழாக்களைக் குழந்தைகள் அவதானிப்ப தால் அவர்கள் உள்ளம் கொள்ளை மகிழ்ச்சியில் திளைக்கிறது. அத்தோடு புராணக் கருத்துக்களையும் கோட்பாடு களையும் நிதர்சனமாகக் காணும் போது மனதில் ஒரு திருப்தியும் நிறைவும் ஏற்படுகின்றன. தம்மை அறியாமலே ஒரு பற்றும் பரவசமும் உண்டாகின்றது. இத்தகைய விழாக்கள் முருகன் கோவில் களில் மாத்திரமல்ல, பிள்ளையார் கோவிலில் பிள்ளையார் கதை, திரு விழாக்கள், ஆவணிச்சதுர்த்தி, அம்பாள் கோவில்களில் திருவிழாக்கள் நவராத்திரி விழாக்கள் இப்படி எந்தெந்த மூலமூர்த்திகள் உண்டோ அவ்வவற்றிற்கேற்ப கோயில் கிரியைகள் திருவிழாக்கள் அறங்காவலர்க ளின் கருத்துக்கும் வசதி பொருள் வாய்ப் புக்குமேற்பக் கொண்டாடப்படுகின்றன. இவற்றையெல்லாம் குழந்தைகள் தரிசிக் கும் வாய்ப்பையும் அநுபவிக்கும் சந்தர்ப் பங்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண் டியது பெற்றோராகிய எமது கடமையே. வெறும் பார்வையாளராகவே அவர்களை விட்டுவிடாமல் இடைக்கிடை இவை பற் றிய நுட்பங்களையும் கருத்துக்களையும் கதை மாதிரிச் சொல்லிப் புரிய வைக்க வேண்டும்.

குழந்தையும் தெய்வமும் கொண்டா டும் இடத்திலே என்பர். குழந்தைகள் கொஞ்சி மகிழும் தாயினிடத்தில், கூட உறவாடும் தாத்தா பாட்டியிடத்தில், நெருங்கிப் பழகும் நண்பர்களிடத்தில், சகோதரர்களிடத்தில், உடன் விளையா டும் விளையாட்டுப் பொருட்களிடத்தில், அன்பும் வாத்சல்யமும் மிக்கவராக இருப் பர். குழந்தைகள் எப்படித்தாம் நெருங்கி உறவாடும் பொருட்களுடனும் பிராணி களிடமும் மனிதனிடமும் பற்று வைக்கின் றனவோ அப்படியே இறைவனிடமும் தம்

மகிழ்ச்சியோடு மேற்கொள்ளப்படும் எந்தக் கடமையும் கடினமானதல்ல.

மையறியாமலே அவர்களுக்குப் பக்தி ஏற்பட்டுவிடும். தெய்வம் எப்படியோ அப்படியேதான் அப்பழுக்கற்ற குழந்தைகளும் அதனாலன்றோ ''குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்'' என்பர். இடையிடையே கதிர்காமம், திருக்கோணேஸ்வரர் ஆலயம் போன்ற நீண்ட தூரத்தில் அமைந்துள்ள ஆலயங்களுக்கும் யாத்திரை செல்வதும், அங்கு நடைபெறும் ஒவ்வொரு விடயங்களுக்கும் எமது சமயத்தோடொட்டிய விளக்கங்களைச் சொல்வதும் பிள்ளைகளை ஆன்மீகத்தில் காலூன்றச் செய்யும் படிகளாகும்.

> யாவர்க்கும் ஆம் இறைவற்கொரு பச்சிலை
> யாவர்க்கும் ஆம் பசுவுக்கொரு வாயுறுகு
> யாவர்க்கும் ஆம் உண்ணும்போதொரு கைப்பிடி
> யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே!
>
> திருமூலர் - திருமந்திரம்

கோவிலோடு மாத்திரம் ஆன்மீகம் நிலை கொண்டு விடுவதல்ல. வீடுகளிலும் பெற்றோர், பெரியோரின் பழக்க வழக்கங்களிலும் பக்திநெறி பரவியுள்ளதைக் குழந்தை அவதானிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நாள்தோறும் வீடுகளிலே மாலை நேரம் விளக்கேற்றியதும் சுவாமி படத்திற்கு விளக்கு வைத்து வணங்கிய பின்னரே வேறு விடயங்களில் ஈடுபடும் பண்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கோவிலில் மட்டுந்தான் என்றில்லாமல் வீட்டிலும் சுவாமி அறையில் அல்லது வணங்கும் சுவாமி வீற்றிருக்கும் சுற்றாடல் புனிதமாகவும் நாம் உட்கொள்ளுமுன் உணவைக் சுவாமிக்கு நிவேதித்து வணங்கி உண்ணும் பழக்கமும் கைகொள்ளப்படல் வேண்டும். தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளை அந்தந்தத் தினத்துக்கு உரிய முறையில் ஓதுவதனால் பக்தியோடு பிள்ளைகளுக்கு அவற்றை மனனம் செய்வதும் இலகுவாகிறது.

சுவாமி அறையில் அல்லது சுவாமி படம் வைத்து வணங்கும் இடத்தில் விசேட நாட்களில் கோலம் போடுதல், மாவிலைத் தோரணங்களால் அலங்கரித்தல், மாலைகள் சரங்கள் கட்டுதல் விதவிதமான படிமுறைகளில் சுவாமியை அலங்காரம் செய்தல், தேவாரங்கள் பக்திப் பாடல்களைப் பாடுதல் புராணக் கதைகளை வாசித்தல், சமய சம்பந்தமான பேச்சுக்களில் பங்கேற்றல், சிறு நாடகங்களை எழுதுதல் நடித்தல், கும்மி, கோலாட்டம் அடித்தல் இறைவனின் பெருமை, திருவிளையாடல்கள் பற்றி இசையும் கதையும் நிகழ்த்துதல் போன்றன எல்லாம் குழந்தைகளின் மனதில் இசையையும் ஆர்வத்தையும் எழுப்புவனவாகும். இத்தகைய சூழலை நாம் வளர்த்து விடின் குழந்தைகள் சமயநெறி விளங்கியவர்களாகவும் ஆத்மீக தாகம் உள்ளவர்களாகவும் வளருவர்.

இதே மாதிரியான அனுபவங்களைப் பாலர் வகுப்புகளிலும் பாடசாலைகளிலும் குழந்தைகள் பெறக்கூடியதாக நாம் அமைத்தால் சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டாற்றிய பெருமை நம்மைச் சேரும். ஒரு நிகழ்ச்சியில் 6, 7 குழந்தைகள் பங்கேற்று நடிக்கிறார்களென வைத்துக் கொண்டால் அவற்றை நூற்றுக்கணக்கான குழந்தைகள் அவதானிக்கிறார்கள். மனதில் பதிக்கிறார்கள். குழந்தைகள் விரும்பியோ விரும்பாமலோ இவ்விட

நீங்கள் கோபமாக இருக்கும்போது அதிக அளவு சக்தி வீணாக்கப்படுகிறது.

தூமணி மாடத்துச் சுற்றும்
விளக்கெரிய,
தூபம் கமழத் துயிலணைமேல்
கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம்
தாழ்திறவாய்;
மாமீர் அவளை யெழுப்பீரோ?
உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ?
அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப்
பட்டாளோ?
'மாமாயன் மாதவன் வைகுந்த'
னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ
ரெம்பாவாய்.

தூய மாணிக்கங்களை அழுத்திச் சமைத்த மாடத்திலே சுற்றிலும் விளக்குகள் எரியவும், அகில் முதலியவற்றின் புகை மணக்கவும், தூங்குவதற்கென்றே உள்ள படுக்கையின் மீது கண் உறங்குகின்ற அம்மான் மகளே! மாணிக்கக் கதவின் தாழ்ப்பாளைத் திற! (மாமன் மகளை இவ்வாறு அன்போடு எழுப்பியும் அவள் எழவில்லை. ஆதலால் அவள் தாயை அழைத்து, அவளை எழுப்பும்படி வேண்டுகின்றனர்.) மாமியாரே! உங்கள் மகள் எங்களுக்குப் பதிலே சொல்லாததால் ஊமையோ! அல்லது (கேளாத) செவிடோ! உறக்கமோ? ஒழிவில்லாத ஆழ்ந்த உறக்கத்தில் மந்திரத்தினால் கட்டுப்பட்டுக் கிடக்கிறாளோ? ''மாமாயனே'' மாதவனே! வைகுந்தனே!'' என்று அவனுடைய திருநாமங்கள் பலவற்றையும் கூறினோம். ஆயினும் அவள் எழவில்லை! அவளை எழுப்ப மாட்டீர்களோ!

ஆண்டாளின் 'திருப்பாவை'

யங்கள் அவர்களின் மனதின் ஆழத்தில் நன்கு பதிந்து விடுகின்றன. உடனடியாக அவற்றின் எதிர்வினை தொழிற்படாவிடினும் அக்கருத்துக்கள் குழந்தைகளின் ஆழ் மனதில் உறைந்து அவர்கள் வளர வளர அவர்களுடைய கருத்துக்கள் சிந்தனைகளோடு பக்தியும் வளர்ச்சியுறும்.

பாகற்கொட்டை போட்டால் சுரைக்கொட்டை முளைக்காது, பாகல்தான் படரும் என்பதுபோல மென்மையும் பசுமையான கள்ளங் கபடமே தெரியாத குழந்தை மனதிலே நாம் என்னென்னவற்றைப் பதியவைக்கிறோமோ அதன்படியே குழந்தையின் எதிர்காலம் பரிமளிக்கும் என்பதை யாவருமே ஏற்றுக் கொள்வர். இதனாலன்றோ தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடு வரை என்று ஆன்றோர் மொழிந்தனர்.

பச்சைக் குழந்தை கொஞ்சம் வளரட்டும், உலக இன்பங்களைச் சுவைக்கட்டும். வளர்ந்து, படித்து இல்லறத்தில் வாழ்ந்து எல்லா அனுபவங்களையும் பெற்றபின் ஆறுதலாக ஆத்மீகத்தைப் பற்றி ஆராயலாம் என தெய்வ சிந்தனையைத் தள்ளிப் போடுவோர் பலர். கடவுள் படைத்தவற்றையெல்லாம் அனுபவித்துவிட்டு வயது முதிர்ந்து வாழ்வில் வெறுப்பேற்பட்ட பின்னர் உருத்திராக்கம் அணிவோம்; ஓம் முருகா ஓதுவோமென எண்ணுபவருமுளர். இவையெல்லாம் மனிதருடைய அறியாமையென்றே கொள்ளலாம்.

குழந்தைகள் வளரும் போதே அவர்களுடைய உள்ளத்தில் உணர்வில் இறைவனுடைய சிந்தனையும் செயலும் மா[illegible]டத்தோடு ஒருங்கிணைந்து வளர வழி காட்ட வேண்டியது நம ஒவ்வொருவருடைய கடமையுமாகின்றது.

அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்கப் பழகிய மனிதன் ஆற்றல் மிக்கவன்.

# வி. என். சிவராஜா அமரரானார்

இந்து சமயத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் வடகிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராகப் பணியாற்றியவரும், சைவ சமயச்சான்றோனுமாகிய வி. என். சிவராஜா அவர்கள் செப்டம்பர் மாதம் 27ம் திகதி சென்னையில் அமரத்துவம் அடைந்தார்.

ஆரம்பகாலத்தில் யாழ். மத்திய கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சிவராஜா அவர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் பிரிவுக் காரியாதிகாரியாகவும் தமது வாழ்க்கைக் கையின் ஆரம்பகாலத்தில் பணிபுரிந்தார். பின்னர் அரச கருமமொழி திணைக்களத்தில் தமிழ்மொழி நிர்வாகத்திற்கு பொறுப்பான உதவி ஆணையாளராகவும் இலங்கையில் இந்துசமய கலாசார அமைச்சு உருவானபோது அதன் கீழ் இயங்கிய இந்து சமயத் திணைக்களத்தின் முதலாவது பணிப்பாளராகவும் பணிபுரிந்தார்.

அவர் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த போது திணைக்களத்தை ஒழுங்கமைப்பதிலும் அதன் பணிகளை வடிவமைப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தினார். இன்று இந்து சமயத் திணைக்களம் பலவாறான பணிகளில் ஈடுபடுவதற்கு நிர்வாக ரீதியில் வித்திட்ட பெருமை சிவராஜா அவர்களேயே சாரும்.



அமரர் வி. என். சிவராஜா அவர்களின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் உரையாற்றுவதையும், கலந்துகொண்ட கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

மனதில் அமைதி நிலவாதபோது உலகில் எப்படி அமைதி நிலவமுடியும்?

திணைக்களப் பணிப்பாளராக இருந்த பின்பு நிதியமைச்சின் மூத்த உதவிச் செயலாளராகவும் 1983 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராகவும் பணி செய்த அவர் 1990 ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் அவரது உழைப்பின் பயன் அரச நிறுவனங்களூடாகவே மக்களுக்குக் கிட்டியது.

பொது நிர்வாக, மாகாண சபைகள் அமைச்சின் ஆலோசகராக அவர் பணி செய்த போது பொது நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு விரிவுரையாளராகத் திகழ்ந்தார். பொது நிர்வாகத் துறையில் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கல்வியில் உயிர்ச்சி பெற்றார். அவரது அறிவு, ஆற்றல், உழைப்பு, அர்ப்பணிப்புணர்வு போன்ற பல தகைமைகளினால் வடகிழக்கு மாகாண சபை உருவானபோது அதன் பிரதம செயலாளராகக் கடமையேற்றார்.

அமரர் சிவராஜா அவர்கள் எந்தப் பணியை ஏற்ற போதும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு கடமை செய்த காரணத்தினால் தாம் வகித்த பதவிகள் அனைத்துக்கும் பெருமை சேர்த்தார்.

இளமையிலிருந்தே ஆன்மீக நாட்டமிக்கவராக இருந்த சிவராஜா அவர்கள் ஆலயங்களோடு சார்ந்த அனைத்து விடயங்களிலும் தன்னைப் பிணைத்துக் கொண்டார். சாது சங்கத்தைப் பெரிதும் விரும்பினார். ஆன்மீகத் துறவியர்பால் மிகுந்த நாட்டம் கொண்டு தாமாக அவர்களை

## காவடிச் சிந்து

சிற்றிலக்கிய வடிவங்கள் பலவற்றுள் சிந்துவும் ஒரு தனி இலக்கிய வடிவமாகக் கருதப்படுகிறது. சிந்து என்ற நாட்டுப்புற இசை வடிவில் பல தமிழ்ப் பாக்கள் உள்ளன. மிகத் தொன்மையான பரிபாடலில் இருந்து தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாசுரங்கள் என்பவற்றிலும் அருணகிரிநாதரின் திருப்புகழிலும் மெட்டு நிறைந்த பாடல்கள் உள்ளன.

காவடி என்பது காவு + தடி என்ற இரண்டு சொற்களின் கூட்டாக அமைந்ததாகும். பொதுவாக முருகன் ஆலயங்களுக்கு வேண்டுதலின் பெயரில் காவடி எடுத்துச் செல்வது பக்தர்களின் மரபாகும். இங்ஙனம் செல்லும் வழிப்பயணங்களில் முருகனின் புகழைச் சிந்து மெட்டில் பாடிக் கொண்டு செல்வதால் இப்பாடல்கள் காவடிச் சிந்து எனப் பெயர் பெற்றன.

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் சென்னிக்குளம் என்னும் ஊரில் பிறந்த அண்ணாமலை ரெட்டியார் (1816 - 1891) காவடிச்சிந்து என்னும் பெயரில் 24 பாடல்களை இயற்றினார்; வேறு வகையான பல பாடல்களை இவர் இயற்றிய போதும் காவடிச்சிந்து பாடல்களே பாமர மக்களிடையே சிறப்புப் பெற்றன.

காவடிச் சிந்து போலவே பாடப் படும் பொருளுக்கேற்ப வழிநடைச் சிந்து, நொண்டிச் சிந்து, கதைச் சிந்து எனப் பாடல்கள் உள்ளன.

சிந்திசையிலே ஈர்க்கப்பட்ட மகாகவி பாரதியார் சிந்து மெட்டில் நிறையப் பாடல்களை இயற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

புகழ்ச்சியில் மகிழ்பவன் இகழ்ச்சியில் துயரப்படுவான்.

அணுகி அருளுரை, ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளி லும், திருகோணமலை ஸ்ரீமத்சுவாமி கங் காதரானந்தா அவர்களிடமும் காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரிய சுவாமிகளிட மும், பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா விடமும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். ஆன்மீகம் தொடர்பான கூட் டங்கள், பஜனை, சத்சங்கம் என்பன எங்கு நடந்தாலும் சிவராஜா அவர்கள் முதன்மையானவராகக் கலந்து கொண்டார்.

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சு மேற்கொண்ட பணிகள் அனைத் திற்கும் உறுதுணையாக இருந்த அவர், எந்த ஒரு சிறு வைபவமாயிருப்பினும் தவ றாது கலந்து கொண்டு தமது ஆலோசனை களை வழங்கி உதவினார். சென்ற ஆண்டு அமைச்சு நடாத்திய பக்திப் பெருவிழா வின் கருத்தரங்கிற்குத் தலைமையேற்று மிகச் சிறப்பாக அதனை நடாத்திக் கொடுத்தார்.

அமரர் சிவராஜா, தமது பணிகள் மூலமும் வாழ்வின் மூலமும் ஒரு சான்றோ ராகவே வாழ்ந்து காட்டியவர். மிக எளி மையாகப் பழகும் பண்புகள் நிறைந்த சுபாவத்தின் மூலம் அனைவராலும் விரும் பப்பட்டவர். அவரது திடீர் மறைவை யொட்டி இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களும் அமைச்சின் செயலாளர் திரு. கா. தயா பரன் அவர்களும் திணைக்களப் பணிப் பாளர் திரு. க. சண்முலிங்கம் அவர்களும் தமது ஆழ்ந்த அனுதாபங்களை திருமதி. சிவராஜா அவர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரிவித்தனர்.

இந்து சமயத் திணைக்களம் அதன் முதற் பணிப்பாளரான சிவராஜா அவர் களின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

## அமரர் சிவராஜாவுக்கு நினைவஞ்சலி

இந்து சமய, கலாசார திணைக்களத்தின் முதற் பணிப்பாளரும், வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளருமான வி. என். சிவராஜா அவர்கள் தமிழ கத்தில் அமரரானார்.

அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நினைவுக் கூட்டமொன்று நவம்பர் மாதம் 14ம் திகதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், பண்ணிசைப் பாவலர், பி. வி. இராமனின் தேவார இசையைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர், அமரரின் உருவப்படத்திற்கு மாலை அணி வித்தார்.

திருவாளர்கள். செ. குணரத்தினம், சிவா. சி. மாணிக்கவாசகர், சொ. கணேச நாதன், கா, தயாபரன், க. சண்முகலிங்கம் திருமதி. வசந்தா வைத்தியநாதன், வி. சிவராசசிங்கம், கு. குருசாமி ஆகியோர் அமரர் வி. என். சிவராஜா ஆற்றிய பணி களைப் போற்றிப் பேசினர்.

உயர்ந்த உண்மைகளைக் கூறும் நூல்கள் வெளிச்ச வீடுகளைப் போன்றவை.

# திணைக்களச் செய்திகள்

மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் 1991ம் ஆண்டு நான் காண்டு கற்கைநெறியை முடித்துக் கொண்டு வெளியேறிய பன்னிரெண்டு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா ஒக்டோபர் மாதம் 31ம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சுற்றுலா கிராமிய கைத்தொழில்துறை அமைச்சர் கௌரவ எஸ். தொண்டமான் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி இராஜேஷ்வரானந்தா அவர்கள் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட இவ் வைபவத்தில் கல்லூரி அதிபர் திருமதி. தட்சணா மூர்த்திஅவர்களின் உரையும் இடம் பெற்றது.

சான்றிதழ் வழங்கலைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் நிருத்தியாஞ்சலி, இன்னிசை விருந்து, பிருந்தகானம், சீதா கல்யாணம் நாட்டிய நாடகம் என்பன இடம்பெற்றன.

## திணைக்களத்தில் நவராத்திரி பூஜை

இந்துசமயத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நவராத்திரி பூஜை வழமை போல சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், பூஜகர் இரா. நீதிராஜ சர்மா அவர்கள் பூஜையை நடத்தி வைத்தார்.


இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் இராஜாங்கச்செயலாளர் திரு. கா தயாபரன், திணைக்கள பணிப்பாளர் திரு க. சண்முகலிங்கம், பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவி பணிப்பாளர்களான திரு. வீ. விக்கிரமராஜா. திரு.எஸ். குமார்வடிவேல், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் திருமதி சீதா நித்தியானந்தன் இணைப்பதிகாரி திரு. கோ. சேனாதிராசா, ஆகியோர் உட்பட அமைச்சின் உத்தியோகத்தர்கள் அனைவரும் பூஜைகளிற் கலந்து கொண்டனர்.

## இந்தியக் கலைஞர்களின் விரிவுரைகள்

இந்திய இசை, நாடகக் கலைஞர்களான கலாநிதி துர்கா, திரு. வேணு ஆகியோரின் தமிழிசைக் கூத்து விரிவுரைகள், பெப்ரவரி மாதம் 22ம் திகதி மாலை இந்து சமயத் திணைக்களக் கேட்போர் கூடத்தில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றன.

> உடம்பினை முன்னம் இழுக்கென்று
> இருந்தேன்
> உடம்பினுக்குள்ளே உறுபொருள்
> கண்டேன்
> உடம்புளே உத்தமன் கோயில்
> கொண்டான் என்று
> உடம்பினை யானிருந்து ஓம்பு
> கின்றேனே!
>
> திருமூலர் – திருமந்திரம்

நேரம் என்பது வாழ்க்கை! நேரத்தைவீணாக்குவதும் வாழ்க்கையை வீணாக்குவதும் ஒன்றுதான்



இந்துசமயப் பேருரைத் தொடரில், உலக சைவப்பேரவையின் செயலாளர் நாயகமும் லண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வருமான தவத்திரு சிவநந்தி அடிகளார் உரை நிகழ்த்துவதையும், கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

கர்நாடக சங்கீதத்திலும், இசைத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு மிக்க கலாநிதி துர்கா அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்தில் சங்கீதவியலில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

கேரளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வேணு, மோகினி ஆட்டம், கதகளி போன்ற கூத்து வகைகளில் மிகுந்த புலமை மிக்கவர்.

இருவரும் உலகின் பல நாடுகளிலும் தமது திறமைகளை செயல்முறை அமர்வுகளில் நிரூபித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாகித்தியப்பரிசு நூற்தேர்வு

இவ்வாண்டு நடைபெறவுள்ள சாகித்திய விழாவில் நூற் பரிசுத் தேர்வுக்காக திணைக்களம் நூல்களைக் கோரியிருந்தது. 1992ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட நூல்களுள் ஏறத்தாழ 60 தலைப்புகளில் போட்டிக்கென எழுத்தாளர்களால் நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இம்முறை சாகித்திய விழாவின் கருத்தரங்கத் தொனிப்பொருள் **தமிழ் அரங்கியல் - மரபும் மாற்றங்களும்** என இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது. விழாவிற்கு முன்னோடியாக தமிழ் நாடகத்துறை பற்றிப் பல கலந்துரையாடற் கூட்டங்கள் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுவாமி கங்காதரானந்தா நினைவுரை

திருகோணமலை சிவயோக சமாஜஸ்தாபகர் சுவாமி கங்காதரானந்தா அவர்களின் சமாதி நினைவாக மூன்றாவது நினைவுச் சொற்பொழிவு பெப்ரவரி 16ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஒருவருடைய ஒழுக்கம் என்பது முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரிவதில்லை.

உல்லாசப் பயணத்துறை அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் திரு. எஸ், சிவதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் ''சமயமும் ஆன்ம விசார உணர்வும்'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

திரு. ஸ்ரீரங்கநாதன் அவர்கள் வரவேற்புரையும், திரு. ம. சண்முநாதன் அவர்கள் நன்றியுரையும் நிகழ்த்தினர். திணைக்களமும் சிவயோக சமாஜமும் இணைந்து இந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இசைக்கருவிகள் அன்பளிப்பு

கலாசார உறவுகளுக்கான இந்தியக் கவுன்ஸில் இலங்கைக்கு இசைக் கருவிகளையும், கலாசார நூற்தொகுதி ஒன்றினையும் அன்பளிப்பு செய்துள்ளது. இந்த அன்பளிப்புகளை இலங்கையின் இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாள் அவர்கள் பெப்ரவரி 15ம் திகதி தூதுவராலயத்தில் வைத்து சம்பிரதாய பூர்வமாக இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களிடம் கையளித்தார்

கடந்த வருடம் இந்திய விஜயம் மேற்கொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் இந்திய வெளியுறவு இணை அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்த அன்பளிப்புகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்துக்கிரியை வழிபாடு

திணைக்களம் நடத்திய 63வது இந்துப் பேருரை பெப்ரவரி 20ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சைவமணி எஸ். இரட்ணராஜா அவர்கள் ''இந்து கிரியை வழிபாடு'' எனும் பொருளில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார்.

## சைவத்தின் எதிர்காலம்

திணைக்களம் நடத்தும் இந்துப் பேருரைத் தொடரின் 62வது உரை பெப்ரவரி 8ம் திகதி அன்று மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் லண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வரும் உலக சைவப் பேரவையின் செயலாளர் நாயகமுமாகிய தவத்திரு சிவநந்தி அடிகளார் ''சைவத்தின் எதிர்காலம்'' எனுந் தலைப்பில் உரைநிகழ்த்தினார்.

திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் அடிகளாரை வரவேற்றுப் பேசினார். அடிகளார் லண்டனில் ஆற்றும் சைவப்பணிகளைப் பாராட்டி இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன் அவர்கள் மலர்மாலையிட்டு வாழ்த்தினார் இராஜாங்க அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

## கார்த்திகைத்திபம்

கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில், திணைக்களம் ஒழுங்கு செய்து நடத்திய திருக்கார்த்திகைத் தீப உற்சவம் நவம்பர்மாதம் 28ம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தீபத்திருநாள் எனும் பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார். திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் சைவ முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. எஸ் தனபாலா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தொட்ட வேலையை முழுமையாக செய்து முடிக்காமல் வெற்றிக்கு ஆசைப்படக்கூடாது.

## இந்துசமயப் போட்டிகள்

திணைக்களத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் கட்டுரை, பண்ணிசை, பேச்சு ஆகிய இந்துசமயப் போட்டிகள் கடந்த நவம்பர் மாதம் 6ம் திகதி சனிக்கிழமை மாவட்டமட்டத்தில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கான தேசிய மட்டப்போட்டிகள் டிசம்பர் மாதம் 31ம் திகதி காலை பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

தொடர்ந்து அன்று மாலை தேசிய மட்டத்தில் முதல் மூன்றிடம் பெற்ற மாணவர்களுக்கும், மாவட்டமட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குமான பரிசளிப்பு வைபவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாந்தா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை உதவிப் பணிப்பாளர்களான திரு.வி. விக்கிரமராசா, திரு.குமார் வடிவேல் ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்துசமயப்போட்டிப் பரிசளிப்பு வைபவத்தில், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், ஸ்ரீமத்சுவாமி ஆத்மகனாநந்தா ஆகியோர், பரிசு வழங்குவதையும், பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கூட்டத்தினரில் ஒருபகுதியினரையும் படத்திற் காணலாம்.



ஒரு சோம்பேறிக்கு மிகச் சிறிய பணியுங் கூட கஷ்டமானதுதான்.

# வாரியார் என்றொரு வள்ளல்!

அருள்ஞானப் பழமாக, செந்தமிழ் வாரிதியாகத் திகழ்ந்த திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், லண்டன் சென்று சென்னைக்குத் திரும்பும் வழியில் கடந்த **நவம்பர் மாதம் 7ம் திகதி** விமானத்திலேயே அமரத்துவம் அடைந்தார். வாரியார் வாழ்வின் சில அம்சங்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

**த**மிழுலகம் 'வாரியார்' என அன்போடு போற்றிய திருமுருக கிருபானந்த வாரியார், தமிழகத்தின் வேலூரை அடுத்துள்ள காங்கேய நல்லூரில் 1906ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25ம் திகதி பிறந்தவர். தந்தையார் மல்லையாதாஸ் பாகவதர். தாயார் திருமதி கனகவல்லித் தாயார்.

தந்தையார் மல்லையாதாஸ் இசையுடன் பாடி காலட்சேபம் செய்தவர். ஆலயங்களில் விடிய விடிய கதை சொல்லும் பழக்கம் கொண்டவர். தந்தையாரின் கச்சேரிகளில் பின்பாட்டுப்பாடிய வாரியார் சுவாமிகள் இளமையிலேயே ஆயிரக்கணக்கான பாடல்களை மனப்பாடம் செய்து வைத்திருந்தார். இராமாயணம், மகாபாரதம், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருப்புகழ், போன்றவற்றில் பெரும்பாலும் எல்லாப் பாடல்களுமே அவரது மனதில் இருந்தன. தமது பதினேழாம் வயதில் வரதாச்சாரி சுவாமிகள் என்பாரிடம் முறைப்படி வீணை பயின்றார்.

இங்ஙனம் இளமையிலே ஆன்மீக இலக்கிய அநுபவங்களை ஐயந்திரிபறப் பெற்ற சுவாமிகள் தினமும் பலமணி நேரம் சொற்பொழிவாற்றும் வல்லமை கைவரப் பெற்றார். சொற்பொழிவின்போது குறிப்பு எதனையும் வைத்துக்கொள்வதில்லை. மடைதிறந்த வெள்ளம்போல இசையுடன் கலந்த இனிய பாக்களும், தத்துவங்களும் நகைச்சுவைக் கருத்துக்களும் வாரியார் சுவாமிகளிடமிருந்து பெருக்கெடுக்கும்.

இவர்தம் தந்தையார் 1951ம் ஆண்டு வரையும் தாயார் 1977ம் ஆண்டுவரையும் வாழ்ந்தனர். இருவரும் உயிரோடிருக்கும் வரை வாரியார் சுவாமிகள் இருவரையும் வணங்கிய பின்பே தனது கடமைகளை மேற்கொண்டார். இருவரது கால்களையும் தொட்டு ஆசீர்வாதம் பெற்ற பின்பே சொற்பொழிவாற்றச் செல்லுவதை வழக்கமாகக் கொண்டார்.

இளமையிலேயே முருக பக்தராக வழிபாடு செய்த சுவாமிகள் வயலூரில் எழுந்தருளியுள்ள முருகன்மீது நிறைந்த பக்தி கொண்டவர்; வயலூர் முருகனை வழிபட்ட பின்பே சொற்பொழிவையும் ஆரம்பிப்பார். தினமும் காலையில் எழுந்ததும் தம்முடனேயே சுமந்து செல்லும் ஒரு முருக திருவுருவத்திற்கு அபிஷேகம், ஆராதனை பூஜை என்பவற்றை நடத்திய பின்பே தண்ணீர் கூட அருந்துவது என்பதை அவர் விரதமாக மேற்கொண்டு வாழ்ந்தார். இந்தியாவின் வடக்கே விஜயம் மேற்கொண்ட போது இமய மலை அடிவாரம் அமர்நாத் போன்ற கடுங்குளிர்ப் பிரதேசங்களிலும், காலையில் குளிர் நீரில் நீராடி பூஜைகளை முடித்த பின்பே உணவருந்தினார். அவரது பூஜைப் பெட்டி, விமானம், ரயில், கார் அனைத்திலும் உடன்

நேர்மையுள்ள மனிதன் அஞ்சுவதற்கு எக்காரணமுமே இல்லை.

செல்லும். தூரப் பயணங்கள் நடைபெறும்போது ரயிலிலேயே பூஜை நடைபெற்ற சம்பவங்களும் உண்டு.

சுவாமிகள் சஷ்டி, கார்த்திகை விரதங்களை தவறாது அநுட்டிப்பார். அவ்வேளைகளில் எவ்வித உணவும் உட்கொள்வதில்லை. எனினும் தினமும் மூன்றுக்கு குறையாத சொற்பொழிவுகள் செய்தாலும் சோர்வோ, அயர்வோ இன்றி இன்முகத்துடன் பேசுவார்.

தமக்கு வரும் கடிதங்கள் அனைத்திற்கும் பதில் எழுதுவதையும், தினமும் கட்டுரைகள் எழுதுவதையும், தம்மிடம் ஆசிபெற விரும்பும் அன்பர்கள் அனைவருக்கும் விபூதி வழங்குவதையும், எவ்வேளையிலும் அவர் தவறவிட்டதில்லை.

சுவாமிகள் ஆரம்ப காலங்களில் இலவசமாகவே சொற்பொழிவுகளை நிகழ்த்திய போதும் பின்னர் நிதி பெறுவதை வழக்கமாக்கிக் கொண்டார். அவர் பெற்ற பெருந்தொகைப் பணமெல்லாம் ஆலய கும்பாபிஷேகங்கள், பள்ளிக்கூடங்கள் என்பவற்றிற்காக வழங்கப்பட்டுள்ளன. இங்ஙனம் ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் தமது நிதியை வரையாது வழங்கினார்.

தாம் பிறந்த ஊரான காங்கேய நல்லூரில் பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுத்துள்ளார். ஆலயத் திருப்பணிகள் செய்துள்ளார். பல ஏழைகளுக்கு திருமண உதவிகளுக்காக பணம் வழங்கியுள்ளார். இவரது முயற்சியால் 1948ம் ஆண்டு வடலூரில் நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கு ஏறத்தாழ 4 1/2 கோடி ருபா செலவானது. இவ்வாறே பல ஆலயங்களின் குடமுழுக்கு வைபவங்களுக்கும் முன்னின்று உதவினார். திருப்பராய்த்துறை இராமகிருஷ்ணக் குடில் அமைய பல லட்சக் கணக்கான ரூபாயை சேகரித்துக் கொடுத்தார்.

சுவாமிகள் தமது வாழ்நாட்களில் எழுதிக்குவித்த கட்டுரைகள் எண்ணிலடங்காதவை. அனைவருக்கும் புரியும் இலகு மொழியில் எழுதியும், பேசியும் வாழ்ந்த வாரியார் சுவாமிகள் நடமாடும் பல்கலைக் கழகமாகவே திகழ்ந்தவர்.

முதற்சங்கம் அமுதூட்டும் மொய்
குழலார் ஆசை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும் -
கடைச்சங்கம்
ஆம்போதது ஊதும் அம்மட்டோ?
இம்மட்டோ?
நாம் பூமி வாழ்ந்த நலம்.

- பட்டினத்தார் -

சின்னச் சின்னக் கதைகள் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களில் நிறைந்து வாழ்ந்த சுவாமி அவர்கள் தமது அருளுரைகள் மூலமாகவே பல குடும்பங்களின் துன்பங்களை நீக்கி மன அமைதி பெருகச் செய்தவர். நாஸ்திகம் பேசியோரையும் ஆன்மீக வாதிகளாக்கிய பெருமை வாரியாரின் சொல்வன்மைக்கு உண்டு. பலர் தமது தீய பழக்கங்களிலிருந்து விடுபட்டனர். இன்னும் பலர் சாத்வீக வாதிகளாக மாறினர். இங்ஙனம் ஞான வள்ளலாகத் திகழ்ந்த சுவாமிகள் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை வந்த போது, இந்து கலாசார இராஜாங்க அமைச்சு நடத்திய பக்திப் பெருவிழாவிற் கலந்து கொண்டு எழுபத்தேழு ஆன்மீக அருளாளர்களுக்கு விருதுவழங்கி வாழ்த்தியதோடு அருளுரையும் நிகழ்த்தினர். வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற கண்கொள்ளாக் காட்சி இன்றும் நம் கண்முன் நிழலாடுகின்றது.

பொழுதெலாம் இறையருளிலே மூழ்கி சென்ற நாடு, ஊர்தோறும் இறையுணர்வைப் பரப்பி, அருளுணர்விற்கும் ஆன்மீக இன்பத்துக்கும் மொத்த உருவாகத் திகழ்ந்த சுவாமிகள் மறைந்துவிட்டாலும் அவரது சொற்பொழிவுகளும், எண்ணங்களும், இந்துத் தமிழ் மக்களின் உள்ளங்களிலே எதிரொலித்துக் கொண்டே இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தொகுப்பு - அன்புச் செல்வன் -

ஒருவரின் நல்ல குணங்களைப் போற்றுவது நம்மை நாமே உயர்த்திக்கொள்வது ஆகும்.

# நீங்கள் - நான் - கடவுள்

சுவாமி சின்மயானந்தா

''சுவாமிஜி! எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை!'' என்று சொல்லி கொண்டுவந்தான் அந்த இளைஞன்.

நவநாகரீகமான உடை அணிந்து, இடுப்பில் சுருட்டுப் புகைக் குழாயை வைத்துக் கொண்டு, அரும்பு மீசையுடன் காட்சி அளித்தான் அவன். அவன் பேசிய ஆங்கிலத்தில் அமெரிக்க நடை இருந்தது. இந்தியாவில் நன்றாகப் படித்து உயர்படிப்புக்கு அமெரிக்காவுக்குப் போன இளைஞனாகத் தோன்றியது. எல்லாமே கூர்மைதான். பார்வை, பேச்சு, கால் பூட்ஸ் நுனி வரை எல்லாமே!

சுவாமிஜியின் முகம் பளிச்சென்று மலர்ந்தது. அகமலர்ச்சி தெரியும் பளீரென்ற புன்னகை. தலையை உற்சாகமாகவே அசைத்தார். ''பிரமாதம்!'' என்று கூறி உற்சாகப்படுத்தினார். அந்த இளைஞனுக்குத் தெம்பு வந்தது.

''நீ பேசுவது எனக்குப் பிடிக்கிறது. உன்னைப் போல ஓர் இளைஞனைச் சந்திக்கவே நான் இத்தனை நாளாகக் காத்துக் கொண்டிருந்தேன். நீ வெளிப்படையாகப் பேசும் விதம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீ சுதந்திரமாக, புத்திசாலித்தனமாகச் சிந்தனை செய்கிறாய். உனக்குத் தோன்றுவதைத் துளியும் மறைக்காமல் தைரியமாக எடுத்துக் கூறுகிறாய்! நல்லது – இப்போது சொல் – எந்தவிதமான கடவுள்மீது உனக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறாய்?''

அந்த இளைஞனுக்கு அந்த வரவேற்பு புதுமையாக இருந்தது. சுவாமிஜியிடம் கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொன்னால் அவருக்குக் கோபம் வரும் என்று அவன் ஓரளவு பயந்து கொண்டுதான் வந்தான். அவர் அவனை வரவேற்று உற்சாகப்படுத்தியவிதம், அவனுக்குத் துணிவையும், தெளிவையும் கொடுத்தது. கொஞ்சம் உற்சாகமாகவே பதில் சொன்னான்.

''இந்தக் கடவுள்தான் - ஏதோ சொர்க்கலோகத்தில் உட்கார்ந்து கொண்டு தன் இஷ்டப்படி மனிதர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டு, அங்கிருந்தபடியே வரங்களையும் தண்டனைகளையும் அள்ளிக் கொடுத்துக் கொண்டு. நம்மை ஆளுவதாகச் சொல்லிக் கொள்கிறார்களே? - அந்த ஆண்டவன் உங்களுக்கு ஒரு மோசடி செய்பவராகவே தோன்றவில்லையா?''

சுவாமிஜி வாய்விட்டுச் சிரித்தார். ''இப்படிக் கையைக் கொடு! உன்னுடைய கருத்தை நான் வரவேற்கிறேன். இப்போது நாம் இருவரும் சமமாக, நண்பர்களாக ஆகிவிட்டோம் என்றே வைத்துக்கொள். இருவரும் மனங்கலந்து பேசுவோம்.

> நமக்கு என்ன தேவையோ, அது ஆண்டவனுக்குத் தெரியும். சர்வ ஞானவான், கருணாமூர்த்தி, கிருபாநிதி, நமக்கு ஏதாவது கொடுத்தால் ஏன் கொடுத்தான் என்று கேட்கிறவன் கிடையாது.
>
> - வாரியார் சுவாமிகள் -

ஒரு பொய் பல பொய்களைச் சொல்வதற்கு காரணமாக அமைகிறது.

ஆமாம் அப்பனே! எனக்குக்கூட அந்த மாதிரிக் கடவுளிடம் நம்பிக்கையே இல்லை! சரி - நீ காலையில் டிபன் சாப்பிட்டாயோ?'' என்று கேட்டார்.

''சாப்பிட்டேன் சுவாமிஜி!''

''நல்லது. என்னென்ன சாப்பிட்டாய்''

''வழக்கம்போலத்தான், டோஸ்ட் செய்த ரொட்டி, முட்டை, தானியம் சேர்த்த பால், பழம் – எல்லாமே! கடைசியில் வழக்கம்போல 'ஸ்ட்ராங்' காப்பி!''

''முட்டையா? சபாஷ்! இப்போது சொல் - உன் பெயர் என்ன?''

''ராம்''

''ராம்! அந்த முட்டைகள் எங்கிருந்து வருகின்றன?''

ராம் ஒரு கணம் புருவத்தை உயர்த்தி ஆச்சரியத்துடன் பார்த்தான். 'இந்தச்சாமி என்ன சொல்ல நினைக்கிறார்? எதற்காக இந்தக் கேள்வி?' என்று நினைத்தான். பிறகு தயங்கியபடி, எனக்குச் சரியாகத் தெரியாது! அனேகமாக நகருக்கு வெளியே இருக்கும் கோழிப்பண்ணை ஒன்றிலிருந்து வரும் என்று தோன்றுகிறது......''

சுவாமிஜி. ''அதை நான் கேட்கவில்லை. அது நிலத்தில் விளைகிறதா? தொழிற்சாலையில் உற்பத்தி ஆகிறதா?'' என்று கேட்டார்.

''சுவாமிஜி! நீங்கள் என்னைக் கிண்டல் பண்ணுகிறீர்கள் என்று தோன்றுகிறது. பெட்டைக்கோழி முட்டை போடும். அது தரும் முட்டைதான் நமக்குக் கிடைக்கிறது. இது தெரியாதாக்கும்?'' என்று ராம் சற்று அலட்சியமாகவே பதில் சொன்னான். தலையை மேலும் கீழுமாக அசைத்துக் கொஞ்சம் யோசனையிலும் ஈடுபட்டான்.

## கோபம்

'காமம் க்ரோதம்' என்று சேர்த்துச் சொல்வது வழக்கம். காமம் என்பது ஆசை. க்ரோதம் என்பது தான் கோபம், ஆத்திரம், துவேஷம் இவை எல்லாகும். மனிதனைப் பாபத்தில் தள்ளுபவை காமமும், க்ரோதமுமே என்று கிருஷ்ண பரமாத்மா கீதையில் சொல்லியிருக்கிறார்.

ஒரு வஸ்துவிடம் ஆசை உண்டாகிவிட்டால், அதைத் தவறான வழியிலாவது அடையமுயல்கிறோம். இப்படியாகக் காமம் என்பது நம்மைப் பாவத்தில் தள்ளுகிறது. அது தமக்குப் பெரிய சத்துரு. அதே போன்ற இன்னொரு சத்துருவே கோபம், நாம் ஆசைப்படுகிற வஸ்து கிடைக்காத பொழுது இதற்குத் தடையாக இருந்தவர்கள்மீது, அல்லது தடை என்று நாம் நினைத்தவர்கள் மீது கோபம் வருகிறது. அதாவது நிறைவேறாத காமமே கோபம் என்று பெயர் கொள்கிறது.

ரப்பர்ப் பந்தைச் சுவற்றில் எறிகிறோம். அது எதிர்த்துக்கொண்டு நம்மிடையே திரும்பி வருகிறது. எறியப்படும் பந்து காமம். அதே பந்து திரும்பி வரும்போது கோபமாகிறது. திரும்பி வருகிற பந்து நம்மையே தாக்குகிறது. அப்படியேதான், நம்முடைய கோபத்தால் பிறரைத் தாக்குவதாக நினைத்தாலும், அது நம்மையே தான் அதிகம் தாக்குகிறது. கோபத்தால் உடம்பெல்லாம் ஆடிப்போகிறது.

—காஞ்சீப் பெரியவர்—

சந்தேகங்களை வளர்த்துக் கொள்வது மனத்தின் புற்றுநோய் ஆகும்.

சுவாமிஜி உடனே, ''அப்படியா? நல்லது! பெட்டைக்கோழியிலிருந்து முட்டைகள் வெளிவருகின்றன. பெட்டைக் கோழிகள் எங்கிருந்து வருகின்றன என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

ராம் ஒரு புத்திசாலியான பையன். சுவாமிஜி தன்னை மடக்குகிறார் என்று புரிந்து கொண்டான். கண்களை அகல விரித்துப் பார்த்தபடி நின்றான். சுவாமிஜி சிரித்தபடியே, ''ஆகவே, முட்டைகள் கோழிகளிலிருந்து வருகின்றன. கோழிகள் முட்டைகளிலிருந்து வருகின்றன முட்டைகள் மறுபடி கோழிகளிலிருந்து வருகின்றன. இப்படிப் போய்க் கொண்டே இருக்கிறதல்லவா? நல்லது. எது முதலில் வந்தது? கோழியா, முட்டையா? உன்னால் உறுதியாகச் சொல்ல முடியுமா? எப்படி வந்தது? சொல்லு பார்ப்போம்...'' என்றார்.

> மனஅமைதி இல்லை என்று அடிக்கடி சொல்வதே தீராத மனநோய்க்கு ஆளாக்கிவிடும். ஏன் மனஅமைதி இல்லை என்பதை தீவிரமாக சிந்திக்க வேண்டும். அப்படி சிந்தித்து, 'இல்லை' என்பதை 'உண்டு என்று மாற்ற முயல வேண்டும். அதற்கு நல்ல சிந்தனை, சிறந்த உழைப்பு, திட்டமிட்ட செயல், உறுதியான நம்பிக்கை, உண்மையான பக்தியை ஏற்படுத்திக்கொள்ளப் பழக வேண்டும். கடற்கரையில் ஆர்ப்பரிக்கும் அலைகளைப்போல அல்லாமல் நடுக் கடலில் அமைதியுடன் மனம் செயல் பட வேண்டுமென்றால் தியானத்தில் ஆழ்ந்திருப்பது நல்லது.
>
> பரமஹம்ச புவனேஸ்வரி சுவாமிகள்

ராம் பதில் சொல்லவில்லை. அதனால் சுவாமிஜி அங்கே கூடி இருந்த எல்லோரையும் பார்த்தபடி பேசத் தொடங்கினார்....

''கடவுள் எங்கேயோ வான்மண்டலத்தில் உட்கார்ந்தபடி கேட்டதைக் கொடுக்கும் தனிநபர் அல்ல. பகுத்தறிவு பூர்வமாகப் பார்த்தால் ஒவ்வொரு விளைவுக்கும் ஒரு காரணம் இருப்பது புலப்படும். நீ கையில் கட்டிக் கொண்டிருக்கும் 'வாட்ச்' தானே வந்து விடவில்லை. உன்னுடைய காலை வேளை உணவு தன்னைத் தானாகவே சமைத்துக் கொண்டு விடவில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் இருக்கிறது. இப்படி எல்லாவற்றுக்கும் முன்னால் ஒரு முதற்காரணமும் இருந்து வந்திருக்க வேண்டும். அதுவே தனித்து நிற்கும் முதன்மையான காரணம். அதற்கு யாரும் ஏதும் முன்னால் இருந்து உண்டாக்கவில்லை. அப்படி உண்டாக்கப்படாமல் தோன்றியதே கடவுள். அவர் மிகப்பழமையானவர், முதன்மையானவர் – ஏன் நாம் குறிப்பிடும் காலம் என்ற எல்லை தோன்றுவதற்கு முன்பே உருவானவர். சனாதனம், புராணம் என்றெல்லாம் சொல்லுகிறோமே, அதற்கு உரியவர். மூலகாரணத்தை அறிவது மனிதனின் ஆவல். எதற்கும் அவன் ஓர் ஆரம்பத்தைத் தேடி அலசுவான். அப்படித் தேட முடியாத ஒன்று, மூலம் என்று கண்டுபிடிக்க முடியாத முதற்பொருள் – அவரே கடவுள். நம்முடைய பகுத்தறிவு அதை முடிவாக ஆராய்ந்து கண்டுபிடிக்க முடியாது. ரொம்பநாட்களாக நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டு வருகிற கோழி – முட்டையின் ஆரம்பத்தைச் சொல்ல முடியாது என்பதைப் போல, 'இவ்வளவுதான் – இதற்குமேல் தெரியாது!' என்று நம்முடைய ஆராய்ச்சி ஓரிடத்தில் நின்றுவிடும். அதுவே மனிதகுலத்தின் நுண்ணறிவின் எல்லை!''

**தெளிவான மனமுடைய ஒருவனுக்கு உலகமும் தெளிவாகவே இருக்கிறது.**

## தியாகம்

மனதில் தெய்வப் பற்று ஓங்கி வளர்வதையே தியாகம் என்று சான்றோர்கள் காட்டியிருக்கின்றனர். தியாக பூமியாகிய எமது நாட்டில் மக்கள் உள்ளத்தில் தியாகம் பெருக வேண்டும்; தியாகம் பெருகுமளவு சுயநலம் என்னும் அரக்கன் மாய்வான். தெய்வப் பற்று என்னும் அருள் நிலை உருவெடுக்கும். தியாகத்தின் அறிகுறியாக ஒவ்வோர் இந்துவும் பிறர்க்குப் பணிவிடை செய்து பழக வேண்டும்; ஆருயிர்களுக்குச் செய்கின்ற பணிவிடையே ஆண்டவனுக்குச் செய்கின்ற பணிவிடையாகும். ஜீவர்களுக்குச் செய்கின்ற சேவையே சிவபூஜையாகிறது. நரர்களுக்குப் புரிகின்ற பணிவிடையே நாராயண பூஜையாகின்றது.

நரர்களுள் எளியவர்களிடத்தும், தாழ்த்தப்பட்டவர்களிடத்தும், தீண்டாது தூர விலக்கி வைக்கப்பட்டவர்களிடத்தும், அலாதியான அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும். இதுகாறும் மேன்மக்கள் என்பார் செய்த தீமைக்கு இத்தகைய மனமாற்றமும் மானிட சேவையுமே பொருத்தமான பிராயச்சித்தமாகும். தியாகத்திலும் திருத்தொண்டிலும் நமது மனம் உயர் நிலை எய்துக! அதனின்று புத்துயிர் பிறக்கும்; புதிய வலிவு வரும்; புதிய எழில் தோன்றும்; தெய்வீகம் திகழும்.

—சுவாமி சித்பவானந்தர்—

ராம் ஒரு கணம் உணர்ச்சி வசப்பட்டுப் போனான். அவனுடைய முகம் ஒளிவிட்டு மலர்ந்தது. சுவாமிஜியிடம் மரியாதை செலுத்தும் குரலில், ''சுவாமிஜி! நீங்கள் சொல்லுவதில் ஏதோ ஒரு 'பொருள் எனக்கு விளங்குவதுபோலத் தெரிகிறது நீங்கள் சொல்லுகிறீர்களே - மூலாதாரம் என்று - அதுதான் கடவுள் என்று நான் புரிந்துகொள்ளலாமா?'' என்று கேட்டான்.

''நீ இப்போது சொல்கிறாயே கடவுள் என்று – அவரைத்தான் வெவ்வேறு மதத்தினரும் வெவ்வேறு பெயர்களை இட்டு அழைக்கிறார்கள். ஆனால் அந்த வெவ்வேறு பெயர்களும் ஒரே மகத்தான தத்துவத்தையே குறிப்பிடுகின்றது. அப்போதும், இப்போதும், எப்போதும்' எதற்கும் மூலகாரணமான, அனாதியாக இருக்கும் அதையே வேதங்கள் பிரம்மம் என்றும் - முழுமையானது என்றும் - முடிவில்லாதது என்றும் கூறுகின்றன. ஆக, பேருண்மை ஒன்றுதான். ஞானிகள் அதற்கு விளக்கங்களை வெவ்வேறு விதங்களாக அளிக்கிறார்கள்.''

''ஆனால் சுவாமிஜி! உங்களுடைய வர்ணனை முழுமையானதாகப் படவில்லையே? கடவுள் என்பவர் அவ்வளவு தானா? அவரை ஒருவர் எப்படிப் புரிந்து கொள்வது?''

''இப்போது நீ விசயத்துக்கு வந்திருக்கிறாய். நான் கடவுளை வர்ணிக்கவில்லை. அப்படி வர்ணிக்க முடியாது; முயலுவதும் அவரை அவமதிப்பதாகும். ஒருவிதத்தில், ஒரு கோணத்தில், ஓரளவு அடையாளம் காட்டவே நான் முயன்றேன். நீ உன் உடையையோ, நாற்காலியையோ, நண்பனையோ சுட்டிக்காட்டுவது போல அவரைக் காட்டிவிட முடியாது. அவரை

சில மனிதர்களின் பேராசையினால் பெரும்பாலான மக்கள் பட்டினியில் வாடுகின்றனர்.

நாம் புத்தியால் காண முடியாது. அவரே அதை இயக்குபவராக இருக்கிறார். கேனோபனிடதத்தில், ''கண்களைப் பார்க்கச் செய்வதும், காதுகளைக் கேட்கச் செய்வதும் யார்?'' என்று கேட்கும் ஒரு கேள்விக்கு, ''அவரே பார்வைக்குப் பொருளாக இருப்பவர். கேட்பதற்கு விஷயமாக இருப்பவர். இயங்கிப் புரிந்துகொள்ளக் கூடியவர் அல்ல!'' என்று குருநாதர் சொல்லுகிறார். இருட்டான வழியில் செல்லும்போது நீ டார்ச் லைட்டை உபயோகிக்கிறாய். எங்கிருந்து வெளிச்சம் வருகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறாய். ஆனால் அதற்காக டார்ச்சைப் பிரித்து பட்டரியைப் பார்க்க முடியுமா? பிரித்ததுமே ஒளி போய் விடுகிறதே? எதை வைத்து அதன் காரணத்தைப் பார்க்க முயலுவாய்? அதுபோலத்தான் இதுவும். உன்னுடைய கண் காது, செவி, மனம், புத்தி எல்லாம் அது அளிக்கும் சக்தியால் இயங்குகிறது. ஆனால் அவை உனக்கு அந்த ஜீவாதாரத்தைக் காட்ட முடியாது: புரிய வைக்கவும் முடியாது! ஆனால் அந்தச் சக்தி நம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது.''

ஒரு கடினமான தத்துவத்தை அவ்வளவு எளிதாகச் சுவாமிஜி சொன்னதைக் கேட்டு எல்லோரும் பேச மறந்து உட்கார்ந்திருந்தார்கள்.

''சுவாமிஜி! அப்படியானால் கடவுள் அல்லது அந்தப் பேருண்மை நம்மால் பார்க்கவோ, கேட்கவோ, தொட்டுணரவோ, சிந்தித்து உணரவோகூட முடியாத ஒன்று என்று சொல்லலாமா?''

''ஆமாம். அதுதான் சரி! பகவத்கீதை அப்படித்தான் சொல்லுகிறது. ''ஆயுதங்களால் வெட்ட முடியாது. நெருப்பால் சுட முடியாது. காற்றால் உலர்த்த முடியாது. இந்த நான் என்னும் தத்துவம் பொருளோ, பதார்த்தமோ அல்ல — உணர்ந்து கொள்'' என்று பகவான் கூறுகிறார்.''

''நான் என்னும் தத்துவம் என்றால்...''

நாம் எதற்காக வலியின் வேதனை குறைய வேண்டும் என்று மருந்துகளை நாடுகிறோம்? எதற்காகத் தூக்க மாத்திரைகளைப் போட்டுக்கொள்ளுகிறோம்? வலி இல்லாத நிலையில் நமக்கு விவரிக்கும்படியான அனுபவம் எதுவும் கிட்டுவதில்லை. தூக்க நிலையில் நாம் எதையும் உணருவதில்லை. இப்படி விவரிக்க முடியாத, உணர்வு மறைந்த நிலைதான் கடவுளைப் புரிந்து கொள்ளும் அனுபவம். அதைச் சொல்லி விளக்க முடியாது; அனுபவித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

நன்றாகத் தூங்கி ஓய்வெடுத்தவனுக்கே அதன் அருமை தெரியும். நல்ல உணவைச் சாப்பிட்டவனுக்கே ருசி புரியும். மனத்தெளிவையும், அதனால் கிடைக்கும் அமைதியையும் புரிந்து கொண்டவனுக்கே அதன் பெருமை தெரியும். வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு வாழ்பவர்களுக்கு, இவற்றைச் சொல்லிப் புரியவைக்க முடியாது. ஆண்டவனிடம் நம்மை விட்டு விட்டு, மனம் உருகி வேண்டினால் அவர் இந்த இனிய அனுபவங்களை நமக்குக் கொடுப்பார். அவை ஒவ்வொன்றிலும் இறைவனைக் காணும் மனப்பக்குவத்தை நமக்கு அளிப்பார். இதுவே இந்துமதம் காட்டும் மிகச் சிறந்த தத்துவம்.

சுவாமி மகேசானந்தகிரி அவர்கள்

மென்மையாகவும் அன்பாகவும் பேசுவதற்கு காசு பணம் தேவையில்லை.

வாழ்க்கையில் ஒழுக்கம் என்பது மிகவும் முக்கியம். அது இல்லாமல் எந்த வெற்றியைப் பெற்றாலும் அது நிலைக்காது. புராணங்களில் வரும் கதைகளில் இதை நாம் உணருகிறோம். ஆனால் பரப்பிரம்மத்தை உணரும் பக்தி பூர்வமான சேவை இந்த வாழ்க்கையை மேம்படுத்துகிறது. வாழ்க்கையில் நாம் பெறும் சாதாரண வெற்றிகளும் பக்தி பூர்வமாக அமைந்தால் இன்னும் மேம்பட்டதாக அமையும். வாழ்க்கையில் பக்தி பூர்வமான காரியங்கள் எதற்காக என்று கேட்கலாம். பரப்பிரம்மம் நம்முள் இலங்குவதைப் பூரணமாக உணர்ந்துவிட்டால், அப்புறம் பக்தி, பூஜை, விரதம் எதுவுமே தேவையில்லை. ஆனால் அந்த நிலை ஏற்படுவது பரிபூரணமான பரிபக்குவமான அனுபவம். அதை அடையும் வரையில் உபதேசமும் அதைப் பின்பற்றுவதும் அவசியம் தான்.

- சுவாமி பூரணானந்தர் -

''ஆமாம். அந்த மிகப் பெரிய வாழ்க்கைத் தத்துவமே நம்முள் இருக்கிறது. உன்னுள்ளேயும் மற்றவர்களிடமும் இருக்கிறது. பர்ஸனாலிட்டியின் உட்பொருள் அதுவே. நாம் நினைக்கிறோம் - மனிதன் என்பது உடம்பு; அதற்குள் ஆத்மா இருக்கிறது என்று. அது தவறு. மனிதனே ஆத்மா - அது உடம்புள் இருக்கிறது. அதுவே உண்மை. உடம்பு ஒரு சட்டை போல. அதைக் கழற்றி விடலாம். மாற்றி விடலாம்!''

''கடவுளைப் பார்க்கவோ, நினைக்கவோ முடியாது என்றால் உருவ வழிபாடு எதற்காக சுவாமிஜி?'' என்று கூட்டத்தில் ஒருவர் கேட்டார்.

''உங்கள் மகன் அமெரிக்காவில் இருக்கிறான். அவனை நீங்கள் பார்க்க முடியாது. அதற்காக அவனுடைய போட்டோவை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும் அது காகிதம்தான் என்று! ஆனாலும் அதைப் பார்த்தாலே உங்களுக்கு அவனுடைய ஞாபகம் வருகிறது. அவனைப் பார்த்தது போலவே மகிழ்ச்சி அடைகிறீர்கள். அதே போல பக்தனுக்கு அந்த உருவத்தைப் பார்த்ததும் கடவுளின் ஞாபகம் வருகிறது. மனித உள்ளத்துக்கு உருவம் இல்லாத ஒன்றை உருவகப்படுத்த முடியாது. பக்தன் அந்த உருவத்தைக் கண்டதுமே பரவசம் அடைகிறான். ஆனால் எல்லோருக்குமே தெரியும் - அது உருவம்தான். அதுவே கடவுள் அல்ல என்று!''

''மற்ற மதங்களில் இருப்பதைப் போலக் குறிப்பிட்ட நாளன்று நாம் ஏன் ஆலயத்துக்குப் போவது என்று வைத்துக் கொள்ளக்கூடாது!'' என்று கேட்டார் இன்னொருவர்.

சுவாமிஜி நிமிர்ந்து கம்பீரமாக சொன்னார்: ''இந்துமதம் ஒரு பகுதிநேர வேலை (Part time job) அல்ல! இறைவனுடன் தொடர்பு என்பது ஒருதொடர்ந்த உணர்வாகத்தான் இருக்க வேண்டும். பள்ளிக்கூடம் செல்லும் மாணவன் ஒரு நாள் உலகம் உருண்டை என்றும் இன்னொரு நாள் தட்டை என்றும் சொல்வதில்லை. அறிந்ததும் உணர்ந்ததும் மாறுவதில்லை. கோயிலுக்கு போவதும், வழிபடுவதும், தியானம் செய்வதும், ஒவ்வொரு நாளும் கடவுளை உணர்த்துவதற்கு அவசியமானவை. அது அவனைத் தூய்மையாகவும் வைக்க வேண்டும். வீட்டிலோ, வெளியிலோ, கடைத்தெருவிலோ அந்த உணர்வு தொடர்ந்து வந்து கொண்டே இருக்க வேண்டும். தூய்மையான உள்ளம் இருந்து கொண்டே வர வேண்டும்''.

ஒரு இல்லத்தில் சண்டை தொடங்கினால் வீதியின் ஓரத்தில் சத்தம் கேட்கும்.

''தூய்மையான உள்ளம் என்றால் என்ன சுவாமி?''

''மனம் அலைக்கழிக்கப்படாமல் தெளிவாக இருக்க வேண்டும். ஆசைகள் இல்லாமல் இருக்க வேண்டும். ஆசைகள் நிறைவேறினாலும் ஆபத்து; நிறைவேறாமல் தவிக்க வைத்தாலும் ஆபத்துதான்!''

''அப்படிக் காத்துக் கொள்வதற்கு என்ன வழி?

''காமம், கோபம், பேராசை மூன்றும் நரகத்துக்கு அழைத்துச் செல்லும் வாசல்கள்''.

''எனக்கும் அது தெரிகிறது ஆனால் அதிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளும் வழிதான் புரியவில்லை-''

''அலுமாரியில் கெட்ட நாற்றம் அடிக்கிறது. அதற்குக் காரணம் உள்ளே செத்துக் கிடக்கும் எலிதான் என்று தெரிந்து கொண்டுவிட்டால், அப்புறம் அதை எடுத்து எறிந்து விடவேண்டியதுதானே? அப்புறம் நாற்றம் இராது. அதுபோல உங்களைப் பலவீனப்படுத்தும் அழிவுச் சக்திகளை அடையாளம் தெரிந்து கொள்ளுங்கள். அவற்றைவிலக்கி விடுங்கள்.

''நமது மதம் சொல்லுகிறது. கேட்பது. மனதில் பதியவைப்பது. புரிந்து கொள்வது ஆகியவை மூலம் நாம் பக்தி உணர்வை ஏற்க வேண்டும். ''பகவத்கீதையை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!'' என்று சிலர் என்னிடம் கூறுகிறார்கள். ''கீதை உங்கள் வாழ்வில் நுழையட்டும். ஒரே ஒரு முறை நுழையட்டும். அதுவே உங்களுக்கு தெளிவைக் கொடுத்துவிடும்'' என்று நான் சொல்வதுண்டு. அதன்படி வாழக்கற்றுக் கொண்டால் போதும்!''

''இந்து மதம் நம்மை வாழ்க்கையை விட்டு ஓடிவிட வேண்டும் என்று சொல்லுகிறது என்று சிலர் சொல்லுகிறார்களே? பணத்தையும் சுகத்தையும் ஒதுக்கிவிட வேண்டும் என்று கூறுகிறது என்று கூறுகிறார்களே? இப்படியெல்லாம் வாழ்வது சாத்தியமா?''

''அது தவறு! வாழக் கற்றுக் கொடுப்பதுதான் இந்து மதம். வாழ்க்கையை ஒட்டியதுதான் இந்து மதம். வாழ்க்கையின் நல்ல அம்சங்களே இந்து தர்மங்கள். வாழ்க்கையை விட்டு ஒதுங்கிச் செல்லச் சொல்லவதில்லை அது! அதே போல பணம் சம்பாதிக்க வேண்டாம் என்று அது சொல்லவில்லை. நல்ல முறை

கடவுள் மிருகங்களைக்கூட மனிதனைப் போலவே படைத்திருக்கிறார். ஆனால் மிருகங்களுக்கு இந்தச் சிந்தனைத் திண்மையும் செயல் வேகமும் கிடையாது. வெறும் வலிமை மட்டுமேதான் இருக்கிறது, அதனால் தான் மிகப் பலசாலியான மிருகத்தையும் கூட ஒரு சாதாரண மனிதன் அடக்கியாள முடிகிறது. ஒரு சிறந்த மனிதனையும் சாதாரண மனிதனையும் பிரிப்பதுகூட இந்த சிந்தனை ஆற்றல்தான். அவர்களுடைய சிந்தனையில் இருந்த கருத்தூன்றும் சக்திதான்.

இந்தச் சக்தியைச் சிதறவிடாதீர்கள். இந்தச் சக்தியை வலுபடுத்திக் கொள்ளுங்கள். அதற்காகத் தியானத்தில் ஈடுபடுங்கள். அப்போது நீங்கள் சிந்திப்பதைச் செயற்படுத்தும் துணிவும், மனவலிமையும் உங்களுக்குக் கிடைக்கும். உங்களுடைய எண்ணங்களிலும் காரியங்களிலும் தூய்மை பிறக்கும். அது இறுதியில் உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

**சுவாமி விவேகானந்தர்**

குழந்தையின் முதற்கல்வியே பெற்றோரின் நடத்தைதான்.

ில் நேர்மையாகச் சம்பாதித்து, நல்ல வழியில் தானதர்மங்களுடன் நன்மை தரும்படி செலவிடச் சொல்லுகிறது. பணம் செலவாகும் வழியை நாம் ஆள வேண்டும். அது நம்மை ஆளக்கூடாது. அதற்கு நாம் அடிமையாகிவிடக்கூடாது. இதைத்தான் இந்து மதம் சொல்லுகிறது.

''இந்து மதத்தைப் பொறுத்தவரை வாழ்க்கையில் பற்றுக்களை நீக்குவது என் பது கையில் பணம் இருப்பதையோ, வசதியுடன் இருப்பதையோ பொறுத்தது அல்ல. இருந்தாலும் மனத்தளவில் துறவியாக இருக்கவேண்டும். வாழ்க்கையை ஒட்டிய துறவியாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும், ஜனகர் வாழ்ந்ததைப்போல! அவர் அரண்மனையில் இருந்தார். ஆனால் அவருடைய மனம் இறைவனை நாடி இருந்தது. துறவிகளும் ஞானிகளும் அந்தப் பேரரசரிடம் வழிகேட்டுத் தெரிந்து கொள்ளப் போனார்கள்!''

''புரிகிறது சுவாமிஜி! எப்படி ஆரம்பிப்பது, எப்போது ஆரம்பிப்பது?'' என்று கேட்டான் ராம்.

''ஆரம்பித்துப்பார் — தன்னாலே வரும். உடனே ஆரம்பித்துவிடு இன்றைக்கே நல்லநாள்தான், மனம் துணிந்துவிட்டால் அதுவே நல்ல நாள் - நல்ல நேரம்!''

''இதற்கு ஒரு நடைமுறை உண்டா சுவாமி?'' என்று கேட்டான் ராம்.

இந்தியாவில் சமய உணர்வுக்காக மிகப் புனிதமான தொண்டு செய்தவர் ஆதிசங்கரர். அவர் இதற்கு எளிமையான வழிமுறையைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

''பகவத்கீதையையும் விஷ்ணு சகஸ்ர நாமத்தையும் படித்துப் பாராயணம் பண்ணுங்கள். மகாலட்சுமியின் மனதில் உறையும் நாராயணனை நினைத்து ஸ்மரியுங்கள். அதே தியானத்தில் மனதைச் செலுத்துங்கள். நல்லவற்றையே நினையுங்கள்; நல்லவர்களுடன் சேருங்கள்.

''கடவுள் கொடுத்த செல்வத்தை வீணாக்காதீர்கள். அதை இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள். அது உங்களுக்குப் பல மடங்கு புண்ணியமாக வந்து சேரும்.

''பலர் வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு இந்த பக்திமார்க்கம் பற்றிய சிந்தனையை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களால் எடுத்துக் கொள்ளவே முடியாது - ஏனென்றால் அப்போது புதிய சிக்கல்கள் வந்துசேரும்! என்று கூறி முடித்தார் சுவாமிஜி.

ஒரு குழந்தையின் மழலைச் சொல் ஒரு தாய்க்கு மட்டுமே புரியும். அக்குழந்தை சொல்வது தவறா, சரியா என்று அந்தத் தாய் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பதில்லை. அதற்கு என்ன தேவை என்பதைப் புரிந்து கொண்டு தாய் உடனே தருகிறாள். அப்படி பக்தி ஒன்றையே பிரதானமாகக் கொண்டு நாம் எப்படி சொன்னாலும் லோகமாதாவான தெய்வத்திற்குப் புரியும். இருப்பினும், நாளடைவில் மழலைச்சொல் மாறி சரியான வாக்கியத்தைச் சொல்ல குழந்தை கற்றுக் கொள்கிறது. அப்படி நாமும் சுலோகங்களின அர்த்தங்களைப் புரிந்து கொண்டு பாராயணம் செய்வது நல்லது.

பரமஹம்ச புவனேஸ்வரி சுவாமிகள்

**உங்களை நீங்களே நேசிக்கப் பழகினால் மற்றவர்களின் வெறுப்பில் இருந்து விடுபடுவீர்கள்!**

# தமிழ் நாடகவிழா

இலங்கையின் தமிழ் நாடகத் துறைக்கு புத்தூக்கமும், உரமும் ஊட்டும் வகையில் 1991ம் ஆண்டு ஜுன் மாதம் இந்து சமய, கலாசார இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் இலங்கை மன்றக்கல்லூரியில் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அறிஞர்கள் பலரும், நாடகத் துறை சார்ந்த கலைஞர்கள், ஆர்வலர்களும் பங்கேற்று தமிழ் நாடகத்துறை வளர்ச்சி பற்றிச் சிந்தித்தனர்.

இதன் தொடர்ச்சியாக 1992ம் ஆண்டின் முற்பகுதியில் தமிழ் நாடகப் போட்டி ஒன்றினை நடத்துவதற்கு முன்னோடியாக நாடகப் பிரதிகள் கோரப்பட்டன. மிகுந்த ஆர்வத்துடன் இப் போட்டிக்கென 37 நாடகக் குழுக்க நாடகப் பிரதிகளை அனுப்பி வைத்திரு தன.

இவற்றுள் பத்துப்பிரதிகள் மட்டு மேடையேற்றத் தகுந்ததென நினை களத்தாற் தெரிவுசெய்யப்பட்டன. 1993 ஆண்டு நடுபபகுதியில் குறித்த பத் நாடகங்களையும் தயாரித்து மேடையே றுமாறு நாடகக்குழுக்களை வேண்டி கொண்டபோதும் ஐந்து நாடக மன்ற



வெள்ளிநிலாக் கலாலயத்தின் ''ஆராரோ ஆரிவரோ'' என்ற நாடகத்தில் கலைஞர்கள் தோன்றும் ஒரு காட்சி!

மனம் தெளிவாக இல்லாவிட்டால் சூழலிலும் குழப்பம் இருக்கும்.



அருள் நாடக மன்றத்தினரின் ''பயணம்'' நாடகத்தில் இடம்பெற்ற ஒரு காட்சி!

களே மேடையேற்ற சம்மதித்து முன்வந்தன.

குறித்த ஐந்து நாடகங்களும் இணைந்த தமிழ் நாடகவிழா, இராஜாங்க அமைச்சின் பூரண ஆதரவுடன் இவ்வருடம் பெப்ரவரி 12 முதல் 16ம் திகதி வரை தினமும் மாலை 6 மணிக்கு ஜோன் டி. சில்வா கலையரங்கில் நடைபெற்றது.

இந்துசமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

முறையே அருள் நாடக மன்றத்தினரின் 'பயணம்' வெள்ளிநிலா கலாலயத்தினரின் 'ஆராரோ ஆரிவரோ' மலையாளக் கலாலயத்தினரின் 'முகங்கள்' கவின் கலை மன்றத்தினரின் 'தோட்டத்து ராஜாக்கள்', சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ் அளித்த 'பூகம்பம்' ஆகிய ஐந்து நாடகங்கள் விழாவில் மேடையேற்றப்பட்டன. நாடகத்துறையில் நிறைந்த அறிவும் அநுபவமும் மிக்க ஐவர் கொண்ட குழு நாடகங்களை மத்தியஸ்தம் செய்தது.

குழுவினரின் தீர்மானபடி அரங்கேறிய நாடகங்களுள் முதன்மையானதாக

மக்களுக்காகச் செய்யும் சேவையும், இறைவனுக்காகச் செய்யப்படும் பூஜையும் ஒன்றோடொன்று இணைந்தவை. அதனால் நாம் பக்தி பூண்டு நடப்பதைபோல, மக்களிடம் அன்பும் பரிவும் காட்டி ஒழுக வேண்டும்; இல்லாவிட்டால் பூஜையும் விரதமும் பலன் தராது. பக்தியும், கடமைஉணர்வும் கைகோர்த்துச் செல்வதே வாழ்க்கையில் வெற்றியைத் தரும்.

— ஸ்ரீ சுவாமி விச்வேச தீர்த்தர் —

அன்பை எதிர்பார்க்காதீர்கள் — கொடுத்து விடுங்கள்!

'முகங்கள்' என்ற நாடகமும் சிறந்த நாடக அளிக்கைக்காக 'ஆராரோ ஆரிவரோ' என்ற நாடகமும் தேர்வு செய்யப்பட்டன. அத்துடன் அரங்கேறிய நாடகங்களுள் சிறந்த நடிப்பிற்கான பரிசினை ஹெலன்குமாரி ராஜசேகரன், கமலஸ்ரீ மோகன்குமார் ஆகிய இருவரும் பகிர்ந்துகொண்டனர்.

இந்நாடகவிழா தொடர்பாக சிறப்பு மலர் ஒன்றையும் திணைக்களம் வெளியிட்டுச் சிறப்பித்தது.

இவ்வருட தமிழ் சாகித்திய விழாவின் தொனிப்பொருளாக 'தமிழ்நாடக அரங்கியல்' அமைவதால், நாடக விழாவைத் தொடர்ந்து கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பன நடைபெற உள்ளன.

நாடக விழாவுக்கான சிறப்பான ஏற்பாடுகளை உதவிப் பணிப்பாளர் திரு. ஏ. எம். நஹியா அவர்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மந்திரம் என்பது வெறும் வாய்ச் சொல் அல்ல; அது எண்ணங்களை வலுப்படுத்தும், வீரியம் கொண்டது. ஆழ்ந்து சிந்திக்கச் சிந்திக்க அதன் வீரியமும் அதிகமாகும். அது வாழ்க்கையில் நிலையான பேருண்மையை நமக்குக் காட்டுவதுடன், அதை அடையும் வழியையும் உணர்த்துகிறது. 'ஓம்' என்பது நாம் அடைய வேண்டிய இறுதியான பொருள். 'நமஹ' என்பது அதற்கான மனப் பணிவைத் தரும் வழியான சரணடையும் மார்க்கத்தைக் காட்டுவது. நமக்குள்ளே இருக்கும் பிரம்மனை நாம் உணர, அதுவரை எல்லாம் நாமே என்று தவறாக எண்ணியிருந்த அகந்தை அகல, உள்ளிருக்கும் நாதனை உணர்ந்து ஒன்றிட மந்திரம் நமது சிந்தனைக்குச் சுருதி சேர்த்துக் கொடுக்கிறது. சாதாரண மானுட உயிரையும், மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய அபூர்வமான மார்க்கத்தை காட்டும் வழிகாட்டி ஜபம்; அதற்குப் பயன்படும் வாகனமே மந்திரம்.

— சுவாமி சின்மயானந்தர் —



சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ் அளித்த ''பூகம்பம்'' என்ற நாடகத்தில் ஒரு காட்சி!

அன்பு என்பது எல்லை இல்லாத பிரபஞ்சத்தைப் போன்றது.



மலையாளக் கலாலயத்தினரின் ''முகங்கள்'' நாடகத்தில் ஒரு காட்சியை உதவிப் பணிப்பாளர்கள் திரு. ஏ. எம்: நஹியா, திரு. குமார் வடிவேல் ஆகியோரும் கூட்டத்தினரும் ரசிப்பதைப் படத்திற் காணலாம்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் உடம்புக்கு வேண்டிய வசதிகள், இன்பத்தைத் துய்க்கும் வாய்ப்புகள் ஆகியவற்றை மட்டும் முக்கியம்சமாகக் கருதாமல், அதைவிட உயர்ந்த லட்சியங்களை முக்கியமாக எண்ணி, அதனைக் குறிக்கோளாக வைத்து முன்னேறியவர்களே உயர்ந்திருக்கிறார்கள்; அவர்கள் வாழ்ந்த நாட்டையும் உயர்த்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அதிகமாக இருக்கும் போதுதான் ஒரு நாடு வளர்ச்சி அடைகிறது. அப்படிப்பட்டவர்கள் குறையும் போதுதான் ஒரு நாட்டின் வளர்ச்சி தேய்ந்து போகிறது. ஆகவே, ஒரு நாட்டின் பலம் அதனுடைய ஆன்மீகப் பின்னணியில் தான் இருக்கிறது. அது பின்னனால் தள்ளப்பட்டு, உலகியலான முன்னேற்றத்துக்கான ஆசைகளுக்கு முதல் இடம் அளிக்கப்படும்போது, அந்த நாட்டில் பொருளாதார முன்னேற்றம் கிடைத்தாலும், உயர்வான மனிதப் பண்புகள் சீர்குலைந்து தான் போகின்றன.

— சுவாமி விவேகானந்தர் —

# அங்கும் இங்கும்

## ஸ்ரீமத் கங்காதரானந்தா நூல் வெளியீடு

செல்வி நா. சியாமளாதேவி அவர்கள் எழுதிய ''பிரம்மஞானி ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா'' என்ற நூலின் வெளியீடு அக்ரோபர் மாதம் 16ம் திகதி காலை திருகோணமலை சிவயோக சமாஜ மண்டபத்தில் நடைபெற்றது.

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டுவைத்தார்.

மின் சக்தி, எரிபொருள் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. சிவா. சி. மாணிக்கவாசகர், திரு. எஸ். நவரட்ணம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். நூலாசிரியை செல்வி சியாமளாதேவி அவர்கள் பதிலுரை வழங்கினார்.

★ வடகிழக்கு மாகாண கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் இலக்கியப் பரிசுத் தேர்வுக்கு நூல்கள் கோரப்பட்டுள்ளன. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், சமய இலக்கியம், ஆய்வு இலக்கியம் ஆகிய துறைகள் போட்டிக்குரியன. மேலதிக விபரங்களை செயலாளர், கல்வி கலாசார அமைச்சு, வடகிழக்கு மாகாண சபை, திருகோணமலை என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

## நாவலப்பிட்டியில் நர்த்தன மாலை

நாவலப்பிட்டி பருவதா நர்த்தனாலயம் நடத்திய நர்த்தனமாலை என்னும் நிகழ்ச்சிக்கு இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பிரதம அதிதியாகவும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். ஏ. காதர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் இந் நாட்டிய பள்ளியில் பயிலும் மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அமைச்சர் தேவராஜ் இப் பள்ளியின் பொறுப்பாசிரியையான திருமதி ஷிவாந்தி இராமமூர்த்தி அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினார்.

★ சுவாமி சின்மயானந்தரின் சீடரும், கோயம்புத்தூர் சின்மயா மிஷன் பொறுப்பாளருமான சுவாமி வாகீசானந்தா அவர்கள் ஜனவரி மாதம் 25ம் திகதி கோயம்புத்தூரில் வைத்து மகாசமாதி அடைந்தார்.

பிரம்மச்சாரி தர்மேஷ்சைதன்யா என துறவுப் பெயர் கொண்டிருந்த இவர் கடந்த டிசம்பர் மாதமே சுவாமி வாகீசானந்தா என்ற தீட்சா நாமம் சூட்டப்பட்டார். கடந்த ஆண்டு இலங்கை வந்திருந்த சுவாமி அவர்கள் கொழும்பிலும் ஏனைய பல நகரங்களிலும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

## குன்னக்குடி பாலா குழுவினரின் காவடிச்சிந்து இசை நிகழ்ச்சி

தமிழகத்தில் காவடிச்சிந்து இசை பாடி பக்தி பரப்புகின்ற திருமதி குன்னக்குடி பாலா இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் அழைப்பின் பேரில் நவம்பர் மாதம் இலங்கை வந்திருந்தார்.

இவரது காவடிச் சிந்து இசை நிகழ்ச்சி தலைநகரில் பல ஆலயங்களிலும் நுவரெலியா, நாவலப்பிட்டி, கலஹா, பண்டார

இயற்கையில் எதுவுமே தற்செயல் நிகழ்ச்சி அல்ல.

வளை, புசல்லாவ, தலாத்தோய, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களிலும் நடைபெற்றன. இவரது குழுவில் பாடகர் திரு. மதுரை சுரேந்தர், பாடகி ஜமுனாராணி, ஆகியோரும் இணைந்து பக்தி பாடல்கள் இசைத்தமை குறிப்பிடத்தக்கது.

★ இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தினதும், இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சினதும் அழைப்பின் பேரில் இலங்கை வந்திருந்த பரத நாட்டிய நடனமணியான பத்மஸ்ரீ லீலா சம்சன், தமது குழுவினருடன் கொழும்பு, நுவரெலிய ஆகிய இடங்களில் பரத நிகழ்ச்சிகளை நடத்தினார்.

குழுவினரால் ஜனவரி 23ம் திகதி காலை ஜோன் டி. சில்வா மண்டபத்தில் பரத நாட்டிய செயல்முறை வகுப்பு ஒன்றும் நடத்தப்பட்டது.

## சுவாமி விவேகானந்தர் நினைவு விழா

கடந்த டிசம்பர் மாதம் 5ஆம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ உரையின் 100 ஆண்டு நினைவு தின வைபவத்தையொட்டிய சிறப்பு விழா நடைபெற்றது.

மிஷன் தலைவர் ஸ்ரீமத்சுவாமி ஆத்மகனானந்தாஜீ மகராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு கல்கத்தா இராமகிருஷ்ண மிஷன் உப செயலாளர் ஸ்ரீமத் சுவாமி பிரபானந்தாஜீ மகராஜ் அவர்கள் கலந்து கொண்டார்கள், கல்வி, உயர் கல்வி, கலாசார அமைச்சர் டபிள்யூ. ஜே எம். லொக்குபண்டார இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், சுற்றாடல் பாராளுமன்ற

## காஞ்சிப் பெரியவர் மகா சமாதி அடைந்தார்

ஜகத்குரு எனப் போற்றப்பட்ட காஞ்சி சங்கர மடத்தின் பெரிய சுவாமியான சங்கராச்சாரிய சுவாமிகள் **ஜனவரி மாதம் 8ம் திகதி** காஞ்சி மடத்தில் வைத்து மகாசமாதி அடைந்தார்.

தமது 15ம் வயதில் 1907ம் ஆண்டு காஞ்சி மடத்தின் 68வது பீடாதிபதியாகப் பொறுப்பேற்ற சுவாமிகள் இந்தியா முழுவதும் பாத யாத்திரை செய்து பாமர மக்களிடையே ஆன்மீகத்தைப் பரப்பியவர். தமது எளிமையான வாழ்க்கைமூலம் இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் நடமாடும் தெய்வமாக வாழ்ந்தவர்.

பெரியவரின் மறைவை குறித்து இந்திய அரசியல் தலைவர்கள் பலரும் அநுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் விடுத்த அநுதாபச் செய்தியில் ''காஞ்சிப் பெரியவர் நூற்றாண்டு கண்ட ஆன்மீக ஞானி'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

சுவாமி அவர்களின் பூதவுடல் உப்பு, சந்தனம், மூலிகைகள், விபூதி என்பவற்றுடன் விசேட பூசைகள் செய்யப்பட்ட பின் சமாதியில் வைக்கப்பட்டது.

**இணங்கி வாழத்தெரிந்தவனே வாழ்விற்குரியவன்.**

அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. தேவநேசன் நேசையா, மதுரை காமராஜ் பல்கலைக்கழக இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேராசிரியர் டாக்டர் எம். எம். உவைஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டு சுவாமி விவேகானந்தர் ஆன்மீக உலகுக்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றி சொற்பொழிவு ஆற்றினர்.

நிகழ்ச்சியின் இறுதியில் தமிழகம் காவடிச் சிந்து புகழ், திருமதி. குன்னக்குடி பாலா குழுவினரின் பக்திப் பாடல்கள் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

★ மிருதங்க வித்துவான் ஏ. விக்கிரமன் அவர்களின் சீடரான செல்வன் த. பாலேஸ்வரனின் மிருதங்க அரங்கேற்றம், ஜனவரி 31ம் திகதி ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், மேல்மாகாண சபை உறுப்பினர் ஆர். யோகராஜன், கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறைத் தலைவர் திரு. எஸ். சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு செல்வன் பாலேஸ்வரனை வாழ்த்தினர்.

## தமிழக இசை விழாவில் இலங்கைக் கலைஞர்கள்

இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தமிழக சங்கீத சபாக்களுடன் கலந்துரையாடிய முயற்சியின் பயனாக முதற் தடவையாக இரண்டு இலங்கைக் கலைஞர்கள் டிசம்பர் மாத சங்கீதப் பருவவிழாவிற் கலந்துகொள்ள அழைக்கப்பட்டனர்.

இலங்கையின் பிரபல இசைக் கலைஞரான திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன், பிரபல நாட்டியத் தாரகையான பால சுந்தரி கனகசபை இருவருமே அக் கலைஞர்களாவர்.

தமிழ் நாடு நுண்கலை மன்றம் இக் கலைஞர் பரிமாற்றத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 95ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் 5 தினங்கள் தஞ்சாவூரில் நடைபெற உள்ளது. இம் மாநாட்டிற்கு பல நாடுகளையும் சேர்ந்த தமிழறிஞர்கள் அழைக்கப்பட உள்ளனர். இது தமிழகத்தில் நடைபெறும் மூன்றாவது மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன் 1968, 1981 ஆகிய ஆண்டுகளில் முறையே சென்னை, மதுரை ஆகிய நகரங்களில் மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

★ சின்மயா மிஷன் ஹொங்கொங் கிளையைச் சேர்ந்த சுவாமி ஸ்வரூபாநந்தா டிசம்பர் மாதம் 8ம் திகதியிலிருந்து 14ம் திகதி வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கீதைப் பேருரைகள் நிகழ்த்தினார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்து உரை நிகழ்த்தினார்.

12ம் திகதி மிஷன் மண்டபத்தில் குருதேவர் சின்மயானந்தா அவர்களின் சமாதி நினைவை ஒட்டி சிறப்புக் கூட்டமும் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உங்களுக்கு கௌரவம் வேண்டுமானால் பிறருக்கு அதை வாரிவழங்கக் கற்றுக் கொள்ளுங்கள்!

## சாயி ஜனனதின விழா

ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களின் 68 ஆவது பிறந்த நாள் விழா நவம்பர் மாதம் 23 ஆம் திகதி கொழும்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சாயி மத்திய நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் அதிகாலை கமலாமோடி மண்டபத்தில் ஓங்காரம், சுப்பிரபாதம், நாம சங்கீர்த்தனம் என்பன இடம்பெற்றன. இதேவேளை கொழும்பு - 7 பானஸ் பிளேஸில் உள்ள சாயி மந்திரில் காலை பஜனை இடம் பெற்றது. அன்று மாலை சாயி பக்தர்களின் ஊர்வலம், பஜனை என்பன வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றன.

சமித்தியின் தலைவர் திரு. சிவா. சி. மாணிக்கவாசகர், திரு. ஜகத் குணசேகர, திரு. ஆர். விஜயதுங்க ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

★ டிசம்பர் மாதம் 4ம் திகதி மாலை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் தனிநாயகம் அடிகளார் நினைவுச் சொற்பொழிவு இடம் பெற்றது. மேல் மாகாண ஆளுநர் எஸ். சர்வானந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பேராதனைப் பல்கலைக்கழக தொல்லியற் துறைத் தலைவர் டாக்டர் சுதர்ஸன் செனவிரட்ன ''தொல்லியலாளர்களுக்கு ஊற்று மூலமாகவுள்ள சங்க இலக்கியம்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

★ மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மாசிமகத் திருவிழாவை முன்னிட்டு கொடியேற்றத் தினமான பெப்ரவரி 2ம் திகதி பஞ்சரதப் பவனி வெளிவீதி ஊர்வலம் நடைபெற்றது. அறங்காவலர் த. மாரிமுத்துச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் ஊர்வலத்தில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து 27ம் திகதி வரை விசேட பூஜைகள் நடைபெற்றன.

## குருஜி ஹரிதாஸ்கிரி விஜயம்

தென்னாங்கூர் ஸ்ரீஞானானந்த கிரி சுவாமிகளின் பிரதம சீடரான ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமி அவர்கள் ஜனவரி 18ம் திகதி தமது குழுவினருடன் இலங்கை வந்தார். 19ம் திகதி முதல் 23ம் திகதி வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சுவாமிகளின் சங்கீத உபந்நியாசம் நடைபெற்றது.

23ம் திகதி காலை கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபத்தில் இந்து அறநெறிக்கல்வி மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சியாக சுவாமிகளின் உபந்நியாசம் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

---

ஆசைவலைப் பாசத்து அகப்பட்டு
மாயாமல்
ஓசைமணித் தீபத்தில் ஒன்றிநிற்பது
எக்காலம்?

— பத்திரகிரியார் —

சினமென்னும் பாம்பு இறந்தால்
தாண்டவக்கோனே - யாவுஞ்
சித்தியென்றே நினையேடா தாண்டவக்
கோனே!

— இடைக்காட்டுச் சித்தர் —

**ஒவ்வொரு காலையிலும் சில நிமிடங்களை இறைவனுக்காக ஒதுக்க முடியுமானால் அன்றைய பொழுதில் எண்ணிப்பார்க்க முடியாத பணிகள் நிறைவேறிவிடும்.**

# இந்து உலகம்

## ரஷ்யாவில் சைவம்

சைபீரியாவைச் சேர்ந்த 25 வயதுடைய சுவாமி சதாசிவாச்சார்யா என்பவரின் தலைமையின் கீழ் ரஷ்யாவில் சைவாகம நெறியைப் பின்பற்றும் ரஷ்யர்கள் ஒன்றுகூடி பல்வேறு சைவக் கிரியைகளை நடத்துகின்றனர். மாஸ்கோவிலும், ஏனைய பதினைந்து நகரங்களிலும் பதினைந்து சத்சங்கக் குழுக்கள் இயங்கிவருகின்றன. சிவனையும், சக்தியையும் இவர்கள் பூசித்தாலும் தாந்திரீக முறைகளையே அநுட்டிக்கின்றனர்.

திறந்தவெளியிலும், ஆற்றோரங்களிலும், அமைதியான சூழலிலும் ரஷ்ய சைவர்கள் ஒன்றுகூடி வேத முறைப்படி மந்திரங்கள் ஓதி வேள்வி செய்கின்றனர்.

மொஸ்கோவிலுள்ள சிவாலயத்தில் பக்தர்கள் ஒன்றுகூடி கீர்த்தனைகள் படிப்பதோடு தியானமும் மேற்கொள்கின்றனர். மொஸ்கோவிலுள்ள இந்திய தூதுவராலயத்தின் உதவியோடு, யோகப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. பல ரஷ்யர்கள் சமஸ்கிருத மொழியை மிக ஆவலுடன் பயிலுகின்றனர். சைவ உணவு ஆயுர்வேத மருத்துவம், சோதிடம் என்பவற்றில் ரஷ்ய சைவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்னும் சில ஆண்டுகளுள் ரஷ்யாவில் சைவம் மிக வேகமாகப் பரவிவிடும் எனக் கூறுகின்ற சுவாமி சதாசிவாச்சாரியா, இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் வீரசைவ நெறியைப் பின்பற்றி துறவியானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பாராளுமன்றத்தில் இந்துப் பெண் துறவி

இந்தியப் பாராளுமன்றத்திற்கு மத்தியப் பிரதேச மாநிலத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உமா பாரதி என்பவர் ஒரு இந்துப்பெண்துறவியாவார். காவி உடையிலேயே பாராளுமன்றத்திற்குச் செல்லும் இவர் ஆலயங்களிலும், பொது இடங்களிலும் கீதைச் சொற்பொழிவுகளை ஆற்றுகின்றார்.

32 வயதையுடைய இவர் இளமையிலிருந்து இராமாயணம், பாரதம் போன்றவற்றில் அதிகம் ஈடுபாடு கொண்டு ஆன்மீக நாட்டம் கொண்டவர். முறையாக கல்விப் பயிற்சி பெறாதபோதும் தமது ஆன்மீக அருளுரைகளின் மூலமாவே இவர் பெருந்தொகையான மக்களை ஈர்த்து வந்தார். அத்துடன் அரசியல் மூலம் மக்களுக்கு அதிக நன்மைகளை ஆற்ற முடியும் என்ற நம்பிக்கையில் 1988ம் ஆண்டு பாரதிய ஜனதாகட்சி என்ற கட்சியின் மூலம் அரசியலில் இறங்கியுள்ளார். தமது பக்தர்களே தன்னைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பியதாகக் கூறும் இத்துறவி சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா, லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கீதைச் சொற்பொழிவுகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

அரசியலிலும் தர்மத்தை நிலைநாட்ட முடியும் என்பதே இவரது கோட்பாடாகும்.

## அமெரிக்காவில் வேதப் பல்கலைக் கழகம்

அமெரிக்கா, கலிபோர்னியாவில் கடந்த ஏழு ஆண்டுகளாக வேதப்பல்

கலைக்கழகம் இயங்கிவருகின்றது. இங்கு 900 மாணவர்கள் வேதம், ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய வகுப்புகளைப் பயிலுகின்றனர். 'சத்யம்' என்ற பெயரில் வேத மந்திரங்களை விளக்கும் ஒலிஇழைநாடா ஒன்றும் மாதந்தோறும் வெளியிடப்படுகின்றது.

## சிகாகோவில் விவேகானந்தர் உருவச்சிலை

நூறு ஆண்டுகளுக்குமுன் சிகாகோவில் உலக மதங்களின் ஒன்றுகூடலில் உரை நிகழ்த்திய வீரத்துறவியான சுவாமி விவேகானந்தர் அவர்களின் உருவச்சிலை ஒன்றை சிகாகோ நகரில் நிறுவுவதற்கு நகரமேயர் ஒப்புதல் அளித்துள்ளார்.

## நியூயோர்க் தமிழ்ச்சங்கம்

இந்தியாவிற்கு அப்பால் மேற்கு நாடுகளில் வாழும் இளம் பரதக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம் நியூயோர்க் தமிழ்ச்சங்கம் 1986ம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் பரதநாட்டியப் போட்டிகளை நடத்துகின்றது; போட்டியில் வெற்றி பெறும் கலைஞருக்கு 1.000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ''பால சரஸ்வதி விருது'' வழங்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு அமெரிக்காவில் வாழும் தமிழ் மாணவியான அபர்ணா ராமசாமி இவ்விருதினைப் பெற்றார். இங்கிலாந்திலிருந்து போட்டியிற் கலந்துகொண்ட வித்யா குகநாதன் இரண்டாமிடம் பெற்றார்.

## அமெரிக்காவில் ஸ்ரீ ராஜேஸ்வரி ஆலயம்

அமெரிக்கா ஒஸ்டின் நகரத்தில் ஸ்ரீ ராஜேஸ்வரி ராதாராணி ஆலயம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சுவாமி பிரக்ஷானந்த சரஸ்வதி அவர்கள் இதனை ஆரம்பித்துவைத்துள்ளார். இவ்வாலயத்தை கட்டி முடிப்பதற்கான செலவு 1.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: ''இந்துசமயம் இன்று''!

தமிழில் : — அன்புச்செல்வன்

---

எந்தப் பொருளையும் தீயிலிட்டால், முதலில் அது கறுப்பாக மாறும். பிறகு மேலும் அக்கினிப்புடம் போட்டால் நீற்றுப் போய்ச் சுத்த வெளுப்பாக ஆகிவிடும். அப்புறம் தீயில் போட்டால் அது மாறாது. அதுவே முடிவான நிலை. இப்படி நீற்றுப் போனதே திருநீறு. நீறு, 'பஸ்பம்' எனப்படும். ஈசுவரன் மகாபஸ்பம் உருவில் இருக்கிறான். அழியாத சத்திய உருவில் இருக்கிறான், ஞானம் என்ற தீமூண்ட பிறகு எல்லா ஆசாபாசங்களும் கருகிப்போய் விடுகின்றன. அதற்குப்பின் எஞ்சி நிற்பது தூய்மையான வடிவம்தான். அதுவே திருநீறு.

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

---

எண்ணங்களிலே மேகம் கவிந்திருக்குமானால் கண்களிலே நீர் வழியும்.

# ஆணவமலம்

சைவ சித்தாந்தத் தத்துவம் பல தனிச் சிறப்புகளையுடையது; அதாவது மற்ற தத்துவங்களுக்கு இல்லாத சிறப்புக்கள் பல சைவ சித்தாந்தத் தத்துவத்துக்கு உண்டு முப்பொருள் உண்மையைச் சாதித்தலே இத் தத்துவத்தின் வெள்ளிடைமலை போன்ற சிறப்பு. இத் தத்துவத்தின்படி உட்பொருள்கள் மூன்று. ஒன்று, இயல்பாகவே முற்றறிவுடையது. மற்றொன்று, அறிவித்தால் அறிவது, மூன்றாவது, அறிவித்தாலும் அறிய இயலாதது, இவை முறையே பதி, பசு, பாசம் என்பன. இவை அனாதி. இது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக்கொள்கை. 'மாயை' என்ற குறியீட்டுச் சொல்லுக்கு மற்ற தத்துவங்கள் கூறும் பொருள்வேறு, சைவசித்தாந்தம் கூறும் பொருள் வேறு. மூலப் பொருள்களை முப்பத்தாறாகப் பிரித்து மிகவும் நுண்மையாக விளக்குவது சைவ சித்தாந்தமே, இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள அத்துவிதத் தொடர்பை விளக்குவது சைவத்தின் மற்றொரு சிறப்பு. உயிர்களுக்கு அடிப்படையான, அனாதி குற்றம் அதாவது ஆணவ மலம் ஒன்று உண்டு என்று நிறுவி அதன் இயல்புகளை, அறிவுக்குப் பொருந்தும் வகையில் விளக்குவது சைவத்தின் மற்றொரு சிறப்பு.

> இறைவனை உணருவதற்கு மலர்களும், பூசையும், உருவமும், மந்திரமும், எல்லாவற்றுக்கும் அடிப்படையான மனமும் சாதனங்கள் தாம். அந்தச் சாதனங்களின் வழியே இறைவனை உணரவேண்டும். அப்புறம் இவை எதுவுமே முக்கியமில்லை, மலரில்லாமல் பூஜை செய்யலாம்; பூஜையும் இல்லாமல் உருவத்தை நினைக்கலாம்; உருவம் இல்லாமல் மனதை ஈடுபடுத்தலாம்; இறுதியில் மனமும் இல்லாமலேயே இறைவனிடம் ஈடுபட்டு விடலாம்.
>
> - சுவாமி பூரணானந்த தீர்த்தர் -

உலகில் தீமை எதனால் நிகழ்கின்றது என்பது பற்றி எல்லாச்சமயங்களும் ஆராய்ந்திருக்கின்றன. சில தீமைகளுக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அடிப்படைக் காரணம் என்ன என்பது பற்றித்தான் தத்துவ ஆராய்ச்சி நிகழும். பௌத்தம், சமணம் ஆகிய தத்துவங்கள் தீமைக்கு வித்து ஆசை என்கின்றன. மாயாவாதம் தீமைக்கு வித்து அறியாமை என்று சொல்கிறது. சைவசித்தாந்தம் எல்லாத் தீமைகளுக்கும் முதல் காரணம் ஆணவமலம் என்கிறது. ஆணவ மலத்தின் இயல்புகளை ஆராய்வதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

ஆணவ மலத்தின் இயல்புகள் சில முரண்பட்டவைகளாகத் தோன்றும். எடுத்துக்காட்டாக அறியாமை, ஆணவம் என்று சொல்கிறார்கள். ஆனால் அது வெறும் 'அபாவம்', அதாவது 'இன்மை' அன்று. அது ஒரு பொருள். பொருள் என்றதால் ஒரு சித்துப் பொருள் அன்று. அது அசித்து. அது உயிருக்கு அனாதியே உடன் தோன்றியது என்பார்கள். ஆனால் அது உயிருக்குக் குணம் அன்று; அது குற்றம். அது அனாதி; ஆகையால் முத்திக்காலத்திலும் அழியா

ஒருவர் சம்மதிக்காதபோது இருவருக்குள் சண்டை வர நியாயமில்லை.

தது என்பார்கள். ஆனால் முத்தியில் அது வலுவிழந்து இருக்கும் என்பார்கள். இவ்வாறு அது பற்றிய செய்திகள் சில புதிர்கள் போன்று இருக்கும்.

'உண்மை விளக்கம்' என்ற நூலில் அறியாமை ஆணவம் என்று மட்டும் கூறப் பெற்றிருக்கிறது. ஆனால் அத்தொடரை அறியாமையைச் செய்வது ஆணவம் என்று விரித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, கதிரவன் ஒளி ஒருபெற்றித்தாக வீசிக்கொண்டேயிருக்கிறது. ஆனால் சில காலங்களில் மேக மண்டலம் மறைப்பதால் இருள் உண்டாகிறது. இராக் காலத்தில் இருள் வருவதற்குக் காரணம் சூரிய ஒளியை பூமியின் மற்றொரு பாகம் மறைத்துக் கொள்வதாகும். ஆகையால் சூரிய ஒளியைத் தடுக்கும் பொருள் ஒன்று உண்டு. அதுபோல அறிவை மறைக்கும் பொருள் ஒன்று உண்டு. அது ஆணவம்.

சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய சித்தாந்த சாத்திர நூல்களில் ஆணவமல இலக்கணத்தை விரிவாக காணலாம். மேற்கூறிய மூன்று நூல்களில் கூறப்பெற்ற கருத்துக்களை மட்டும் கீழே தொகுத்துத் தந்துள்ளோம்.

(1) ஆணவமலம் ஒன்றே, உயிர்கள் போல எண்ணிறைந்தவை அன்று. அது பிறவித்துயருக்கு அடிப்படைக்காரணம்.

(2) அது ஒன்றானாலும் எண்ணிறந்த சக்திகளையுடையது. ஆகையால் அது பலவாகிய உயிர்களில் ஊடுருவி நிற்கும். உயிர்கள் பக்குவம் அடையுங் காலத்து அவற்றைவிட்டு நீங்கும் உயிர்கள் வெவ்வேறு காலங்களில் பக்குவம் அடைவதால் வெவ்வேறு காலங்களில் அவற்றை விட்டு நீங்கும்.

குறிப்பு: மின்சாரம் ஒன்று தான். ஆனால் அது பல இல்லங்களில் ஊடுருவி

பந்தபாசம் என்பதும்,மோட்சம் என்பதும் நாம் உணரக்கூடிய நமது நிலைகளே, இவை வெளியிலிருந்து வருவதில்லை. ஆனால் மனிதன் அவற்றை அடையும்வரை மோட்சம் என்பது தனியாக இருப்பதாகவே நினைக்கிறோம். உங்கள் வீட்டுச் சாவியைகால் சட்டைப் பையிலேயே வைத்துக் கொண்டு தேடுகிறீர்கள். சாவிதொலையவில்லை. மறுபடிகிடைக்கவும் இல்லை - இரண்டுமே உங்களுடைய கற்பனைதான். ஆனால் தொலைந்ததாக ஒரு வருத்தம் ஏற்பட்டதால், அகப்பட்டதாக ஒரு மகிழ்ச்சியையும் அடைகிறீர்கள். அதேபோல வாழ்க்கையின் பந்தபாசங்களில் அகப்பட்டு கொண்டவர்களே அவற்றிலிருந்து விலகி மோட்சம் என்று ஒன்று தனியாக இருப்பதாகக் கருதுவார்கள். பந்தபாசத்தையே பொருட்படுத்தாத ஞானிகளும் அதனால்தான் மோட்சம் என்ற மகிழ்ச்சியான நிலையை இந்த உலகிலேயே அனுபவித்துவிட முடிகிறது.

- சுவாமினி சாரதாப்பிரியானந்தா-

பலவகைகளில் தொழில்படுகிறது. ஆணவமலத்தின் மேற் சொன்ன இரண்டு இலக்கணங்களும் இதுபோல் என்று கொள்ளலாம்.

(3) ஆணவமலம் உயிருக்கு அனாதியே உள்ளது. அதனால் அதற்குச் சகச மலம் என்று பெயர் (சக – கூட, ஜம் – பிறப்பு).

(4) கேவல நிலையில், அதாவது உயிர் ஆணவத்தோடு மட்டும் இருக்கும் போது, ஆணவம் அதன் அறிவு, இச்சை,

தொழில்கள் முழுவதையும் விளங்காமல் மறைக்கும்.

(5) சகல நிலையில், அதாவது ஆன்மா, மாயை கன்மங்களோடு தொடர்பு கொண்ட நிலையில், ஏகதேச விளக்கம் பெற்று அவ்வறிவைக்கொண்டு போகம் நுகரும் பொழுது, அம்மல சக்தி அவ்வான் மாவின் அறிவை விபரீதமாக்கி இப்போ கத்தை நுகர்பவன் தானே என எண்ணச் செய்யும். அதாவது போக நுகர்ச்சிக்கு வினை முதலாந் தன்மையை (போத்திருத் துவத்தை) உண்டாக்கும்.

(6) கேவலம், சகலம் ஆகிய இரண்டு நிலைகளிலும் ஆணவம் செம்பினிற் பொருந்திய களிம்பு போல அவ்வான்மாக் களோடு விரவி நின்று அஞ்ஞானத்தை உண்டாக்கும். சகல நிலையில் அது ஆன் மாவிற்கு அஞ்ஞானத்தோடு விபரீத ஞானத்தையும் உண்டாக்கும்.

(7) ஆணவமும், மாயையும் பாசத் தின் பாற்பட்டாலும் ஒருவகையில் மறு தலைப் பொருள்கள். ஆணவம் உயிர்க ளோடு ஒன்றித்து நின்று அவற்றின் இச்சா ஞானக் கிரியைகளை மறைக்கும். ஆனால் மாயை உயிர்க்கு வேறாய் நின்று அவற் றின் இச்சா, ஞானக் கிரியைகளை விளங் கும். இரவில் பொழுது விடியும் வரையில் விளக்கு துணைபுரிவது போல ஆணவ இருள் அறவே தொலையும் வரையில் மாயை, தனு, கரண, புவன போகங் களாகி வந்து உயிர்களுக்குச் சிறிது அறிவை உண்டாக்கும். ஆயினும் சிவஞானப் பேரொளியாகிய கதிரவன் தோன்றினா லன்றி இருள் அறவே அகலாது.

> தரிசனம் என்பது நம்முடைய மனத்தில் ஆனந்தமான உணர்வைத் தூண்டுவது; மெய்யான உணர்வைப் புரியவைத்து, நம்முடைய கவலை களை மறக்கச்செய்வது; இறைவனைப் பற்றிய சிந்தனையைத் தூண்டி நம் முடைய சில்லறையான பிறசிந்தனை களை மறக்கச் செய்வது. இது பார்ப் பதால் நம்மிடம் ஏற்படும் பலனைப் பொறுத்ததேயாகும். பார்க்கும் பொருள் முக்கியம் அல்ல; பலனே முக்கியம்.
>
> - சுவாமி கிருஷ்ணானந்தா -

(8) ஆணவமலம் உயிரோடு கூடப் பிறந்தது; ஆகையால் அதற்குச் சகச மலம் என்ற பெயருண்டு என்று முன்னரே சொன்னோம். மாயையும் கன்மமும் உயிருக்கு வந்து கூடியது. ஆகையால் அவ் விரண்டும் ஆகந்துக மலம் எனப்படும். (ஆகந்துகம் - வந்துகூடியது).

(9) இருப்பினும், இம்மும்மலங்களும் ஆன்மாவிற்கு அனாதியே உள்ளனவாம். ஆணவபந்தம் உயிர்களை மேல்நோக்கி எழாது கீழ்நோக்கி அழுத்தலின் உயிர்கள் கீழான கன்மத்தையே நோக்கும். அதனால் அவற்றிற்குப் பொதுவகையாய் நிற்கும் மூலகன்மம் (முதல்வினை) உளதாகும். கன் மம் மாயையையே பற்றிக் கிடத்தலின் கன்மத்தின் வழி உயிர்களை மாயைபற் றும். ஆகையால் ஆணவத்தை 'சகசம்' என்றும், ஏனைய இரண்டையும் 'ஆகந் துகம்' என்றும் கூறுதல், ஏதுவும், வினை வும் ஆகிய முறைமை பற்றி என்க.

(10) மும்மலங்கள் நெல்லின் முளை தவிடு, உமிபோல சேர்ந்துள்ளன. முளை கன்மத்துக்கும் தவிடு மாயைக்கும், உமி ஆணவத்திற்கும், அரிசி உயிருக்கும் உவமை.

(11) மாயையும் கன்மமும் காரியப் படுத்துவதற்கு ஆணவமலமும் காரணமா யிருத்தலால் அது மூலமலம் எனப்படும்.

**மனித, ஆன்மீகப் பண்புகள் இல்லாத இடத்தில் உண்மையான சுதந்திரம் இருக்காது.**

(12) ஆணவமலம் உயிரின் குணமன்று, அதாவது அதன் 'இயல்பு' அன்று. இயல்பாயின் ஆணவம் நீங்கும்போது உயிரும் அழியும். அது உயிரின் குற்றம், கண் படலத்தால் மறைக்கப்படுவதுபோல.

(13) ஆணவமலம் சடப்பொருள்; அதன் குணம் அறியாமை, உயிர் சித்துப் பொருள்; அதன் குணம் அறிவு.

(14) புற இருள் எப்பொருளையும் காட்டாது. ஆனால் தன்னைக் காட்டிக் கொள்ளும். அக இருளாகிய ஆணவம் ஒரு பொருளையும் காட்டாது, தன்னையும் காட்டிக்கொள்ளாது.

குறிப்பு: வாழ்க்கை அனுபவத்தில் இதன் பொருளைப் பார்க்கின்றோம். சுயவர்கள் தாங்கள் சுயவர்கள் என்பதை உணர்வதில்லை. அவ்வாறு உணர்ந்தால் அதுவே தாங்கள் ஈடேறுவதற்கு முதல்படி.

(15) ஆணவம் உள்ளொளியாகிய சிவத்தைப்போல உயிருடன் அனாதியே கலந்து உயிர்முத்திநிலை அடையும்வரை நிற்கும். பதி, பசு, பாசங்கள் தம்முள் வியாபக, வியாப்பிய, வியாத்திகளாக இருக்கும், அதாவது அவை கடல் பரப்பு, அதில் அடங்கிய நீர், அதில் உள்ள உப்புப் போல ஒன்றில் ஒன்று கலந்தும் அடங்கியும் நிற்கும்.

(16) ஆணவமலம் அனாதியின்றி இடையில் வந்தது என்னில் அதற்குக் காரணமில்லை. அவ்வாறு காரணமின்றி இடையில் வந்தது என்றால் முத்தியிலும் அது வந்து உயிரைப் பிடிக்கலாம் அன்றோ?

(17) ஆணவம் அநாதி என்றதால் முத்திநிலையில் அது எவ்வாறு அழியும்? என்ற கேள்விக்குப் பதில் வருமாறு. முத்திநிலையில் ஆணவம் அழிவது என்பது அதன் சக்தி வலி அழிந்து இருப்பது என்பது பொருள். மேலும் ஆணவம் முத்தான்மாக்களை விட்டு நீங்கினும் பெத்தான்மாக்களிடத்து தொடர்ந்து நிற்கும் ஆகையால் அது நித்தப்பொருள்.

மேற்கூறியவற்றைப் பிழிவாகப் பின்வருமாறு கூறலாம். ஆணவமலம் என்பது நடைமுறையில் 'யான்' 'எனது' என்னும் செருக்கைத் தருவது. 'யான்' 'எனது' என்னும் செருக்கறுதலே வீடு பேறாகும். இதற்குத் திருவருள் துணை இன்றியமையாததாகும்.

''யான் எனது செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்''

(கொ. நீ. சிங்காரவேலு அவர்கள் எழுதிய ''சைவசித்தாந்தக் கட்டுரைகள்'' எனும் நூலிலிருந்து - சென்னை சைவசித்தாந்தப் பெருமன்ற வெளியீடு 1991.)

தீயவர்களால் சூழப்பட்டு, தீய காரியங்களைத் தொடர்ந்து செய்து வந்தால் மனத்தில் தீயஎண்ணங்களின் வடு ஆழமாகப் பதிந்துவிடுகிறது. அப்போது ஒரு இயந்திரத்தைப் போலத் தீயகாரியங்களையே தொடர்ந்து செய்ய முற்படுகிறோம். ஆக, இப்படி ஏற்படும் எண்ணங்களின் வடுக்களே ஒருவனை நல்லவனாகவும் தீயவனாகவும் ஆக்குகின்றன. ஒருவனுக்கு நல்லகுணமும் தீயகுணமும் இவ்வாறுதான் அமைகின்றன. நாம் செய்யும் காரியங்கள், அவற்றின் அளவுக்கு, நம்முடைய மனத்தில் நிரந்தரமாகக் கலந்துவிடாமல் பார்த்துக் கொள்வதே, நாம் கீதையில் சொல்லியுள்ளபடி, மனம் ஒட்டாமல் காரியங்களைச் செய்கிற பக்குவ நிலையாகும்.

- சுவாமி விவேகானந்தர் -

இன்னொருவரை நான் அவமானப்படுத்தும்போது என் சுய கௌரவத்தை இழந்துவிடுகிறேன்.

# ★ அக்கமாதேவி ★

இவர் கன்னட நாட்டுப் பெண்பாற் புலவர் ஆவார். வடகர்நாடகத்தில் வசவண்ணர் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றி வீரசைவ மதத்தைப் பரப்பினார். இந்நெறியைப் பின்பற்றிய அடியார் சிவசரணர் எனப்படுவர். இவர்கள் தமது கருத்துக்களையும் இறை அனுபவங்களையும் பாடல் வடிவில் எழுதி வைத்தார்கள். இவை 'வசனங்கள்' எனப்படும். இவர்களுள் பெண்கள் பலர் இருந்தார்கள். இவர்களுள் ஒருவரே அக்கமாதேவி. இவர், அக்கமாதேவி என்றும் மகாதேவியக்கா என்றும் அழைக்கப்பட்டார். 'அக்கா' என்ற சொல் வீரசைவ சமயத்தில் இவரை மட்டுமே குறிக்கப் பயன்பட்டது. அக்கமாதேவியின் வசனங்கள் பட்டறிவின் களஞ்சியம்; உணர்ச்சிவெள்ளம் கவிதைப்பெட்டகம். பெண்களுக்கே உரிய வகையில் எளிய சொற்களையும், அழகிய உவமைகளையும் பயன்படுத்தித் தம் கருத்துக்களை இவர் வெளிப்படுத்தினார். எளிமையும் தெளிவும் இவர் தம் கருத்துக்களில் மிளிர்கின்றன.

அக்கமாதேவி வடகர்நாடகத்திலுள்ள உடுதடி என்னும் ஊரில் விமலர் என்பருக்கும் சுமதி என்பவருக்கும் மகளாகப் பிறந்தார். இருவரும் சிவநெறிப்படி மகளை வளர்த்தனர். சிவவழிபாடு இவர் வாழ்க்கை நெறி ஆகியது. ஸ்ரீசைலம் என்னும் ஊரைப்பற்றியும், அங்கு உறையும் இறைவன் மல்லிகார்ச்சுனனைப் பற்றியும் கேள்விப்பட்டார். அந்த இறைவனையே தம் கணவனாக வரித்துக்கொண்டார்.

அந்நாளில், அவ்வூரையாண்ட கௌசிகன் என்ற மன்னன் உலாப் போகும் போது அக்கமாதேவியைக் கண்டு அவள் அழகில் மயங்கி, மணம் செய்துகொள்ள விரும்பினான். அவள் மணத்துக்கு ஒப்புக் கொள்ளாவிடில் பெற்றோர் உயிரிழக்க நேரிடும் என்பதற்காக அக்கமாதேவி அரசனை மணக்க ஒப்புக்கொண்டார். தம் வழிபாட்டுக்குத் தடைவிதிக்கக் கூடாதென்றும், தடை ஏற்படுமானால் மூன்று முறை பொறுத்துக் கொள்வதாகவும் கூறினார். மணம் நிறைவேறியது. ஆனால், அக்கட்டுப்பாட்டின்படி அவனால் நடக்கமுடியவில்லை. எனவே, அக்கமாதேவி அரண்மனையை விட்டு வெளியேறினார். கௌசிகன் தொட்ட ஆடைகளை களைந்துவிட்டு, கூந்தல் உடலினை மறைக்கக் கல்யாண நகரம் சேர்ந்தார். வசவண்ணர் முதலிய வீரசைவ அடியார்கள் அங்கே அனுபவ மண்டபத்தில் கூடியிருந்து, தம் இறையனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அக்கமாதேவியும் அவர்களுள் ஒருவர் ஆனார். ''அடியார், மனைவியரே; ஆண்டவரே கணவன்'' என்ற சீரிய கருத்தை அங்கே நிலைநாட்டினார்.

சிவசரணர் (சிவனடியார்) என்ற நிலையை எய்திய அக்கமாதேவி, தம் வசனங்களால் இறைவனுக்குப் புகழாரம் சூட்டினார். உலக வாழ்க்கையில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என வழிகாட்டினார். உடல்மீதுள்ள பற்றுக் குறைவதற்கும், ஆன்மாவை அறிவதற்கும், ஆன்ம நாயகனாகிய இறைவனை அடைவதற்கும் வழிகூறினார். ''அகந்தை கூடாது பசிக்கும்போது பிச்சை எடுத்து உண்ண வேண்டும்; ஏரி குளங்களில் உள்ள நீரைக் குடித்து கோயில்களில் படுத்து உறங்க வேண்டும்; மாயை உலகம் என்ற வடிவத்தில் எல்லோரையும் மயக்குகிறது; இதிலிருந்து விடுபட ஒரு குருவை அணுக வேண்டும்; குருவே உய்யும் நெறி காட்டுவார்.'' இவ்வாறெல்லாம் தம் வசனங்களில் பாடியிருக்கிறார் அக்கமாதேவி. 'சென்ன மல்லிகார்ச்சு' என்பது இவர் தம் வசனங்களில் பதித்துக்கொண்ட முத்திரையாகும். வாழ்க்கையின் மறை பொருளை மக்களுக்கு மிகத் தெளிவாக விளக்கினார். வீரசைவ வசன இலக்கியத்தில் 'அக்கா'வின் இடம் இணையற்றதாகும்.

ஆதாரம் - வாழ்வியற் களஞ்சியம் பாகம் - 1.

---

பிறரிடம் உள்ள நல்ல பண்புகளை நாம் போற்றக் கற்றுக் கொள்ள வேண்டும்.

## காஞ்சிபுரத்தில்

# சேக்கிழார் பெருவிழா

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற அருள் வாக்கிற்கிணங்க அறுபத்திமூன்று திருத் தொண்டர் வரலாறுகளையும் விளக்கிக் கூறி தெய்வத் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர் சேக்கிழார் பெருமானாவார். மானுடம் தெய்வ நிலையை எய்திய உண்மை வரலாறுகளை சேக்கிழார் செழுங் கவித்திறன் செப்புகின்றது; பெரியபுராணம் என்னும் அரிய புராணத்தை ஆக்கித்தந்த சேக்கிழார் பெருமானின் விழா குன்றத் தூர் தமிழகத் தெய்வ சேக்கிழார் மன்றப் பொன்விழாவாக, காஞ்சி மாநகரில் 1994ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 11, 12, 13 ஆகிய திகதிகளில் நடந்தேறியது. பெப்ரவரி 11ஆம் நாள் காஞ்சி ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலய கல்யாண மண்டபத்திற்கு சேக்கிழார் ஜோதி வந்து சேர்ந்த காலைப்பொழுதில் அடியார் திருக்கூட்டமும் திரள விழா களை கட்டியது. தற்போதைய காஞ்சிப்பெரியவர் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் எழுந்தருளி ஆசியுரை வழங்கினார். இதனையடுத்து ஈரோடு விஸ்வநாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.



சேக்கிழார் பெருவிழாவின்போது சேக்கிழார் மன்றத் தலைவர் நீதியரசர் எஸ். நடராஜன் இலங்கைப் பிரதிநிதிகளான திணைக்கள உதவிப் பணிப்பாளர் வீ. விக்கிரமராஜா, கலாசார அலுவலர் மாத்தளை வடிவேலன் இருவருக்கும் விழா நினைவுமலரைக் கையளிப்பதைப் படத்திற் காணலாம்.

இறைவனுக்கு உகந்தவை பக்தியும் மனத் தூய்மையுமே!

இவ்வுலகப் பெருவிழாவில் தமிழக அறிஞர்கள் மட்டுமன்றி சிங்கப்பூர், மலேசியா, மொறிசியஸ், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கு இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களின் ஆசிச் செய்தியுடன் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா, கலாசார அலுவலர் மாத்தளை பெ. வடிவேலன் ஆகிய இருவரும் சென்று திணைக்களம் வெளியிட்ட பெரியபுராணச் சுருக்கம் என்னும் நூலை வெளியிட்டு வைத்ததுடன் சேக்கிழார் வழியில் அறநெறிப்பாடசாலைகள் என்னும் தலைப்பிலும் உரையாற்றினர்.

இந்து கலாசார அமைச்சு நடாத்தும் ''ஆலயங்கள் தோறும் அறநெறிப் பாடசாலை''த் திட்டத்தை இவ்விழாவில் கலந்துகொண்ட உலக அறிஞர் பலரும் அறிந்து வரவேற்றுப் பேசினர். மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் பி பி. தேவராஜ் அவர்களின் பணிகளையும் பாராட்டினர். உலக சேக்கிழார் பெருவிழா சிறப்பாக நடைபெறக் காரணமாக அமைந்த தலைவர் நீதியரசர் எஸ். நடராஜன் பொதுச் செயலாளர் திரு.பி.வி. சம்பந்தன் திரு. கிருஷ்ணன் (ஐ. ஏ. எஸ்.) ஆகியோர் பாராட்டத்தக்கவர்கள். பல அரிய கருத்துக் கருவூலங்களை தாங்கிய மலரொன்றும் விழாவின் நினைவாக வெளியிட்டுவைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாத்தளை - பி. வடிவேலன்

## மலையும் இணையல்ல

கொள்கை உடையவனுக்கு வாழ்க்கை சோதனைதான். யார் எதிர்த்தாலும், கொள்கையில் விடாப் பிடியாக இருப்பது மேலான மனிதத் தரம். விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டு இன்பம் அனுபவித்துக் கொண்டிருப்பது அல்ல வாழ்க்கை. கொள்கைக்காகச் சோதனையை, எதிர்ப்பை, கடினமான வாழ்வு நிலைகளை எதிர்கொள்வதே வாழ்க்கை. எதை இழந்தாலும். கொள்கையை விடாத - எதையும் தியாகம் செய்ய ஆயத்தமாக உள்ள - உறுதிதான் வாழ்க்கையின் வெற்றி. இந்த உறுதி உடையவன் உயர்ந்தவன்.

கொள்கைக்காக எதிர்ப்பைச் சந்திக்கும்போது, உணர்ச்சி மோதல் வரும். எதிர்க்கிறார்களே என்று கோபம்வரும் உறுதியோடு சேர்ந்தாற் போலவே வன்கண்மையும் வரும். கடுஞ்சொல் சொல்லத் தோன்றும், பகைமை உணர்ச்சிகூடத் தோன்றும். வாக்குவாதம் உண்டாகும். கொள்கையை வலியுறுத்தும் வேகத்தில், எதிர்ப்பவரைத் தாழ்வாக பேசவும், வசைபாடவும் நேரும். தன்னை உயர்த்திப் பேசத் தோன்றும்.

இவை போன்ற வேண்டாத உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல், அந்த நிலையில் கூட அடக்கமாக நடந்துகொள்வது. பலராலும் முடியாத செயல்.

மலை எத்தனையோ பூகம்பங்களைத் தாங்குகிறது. எவ்வளவோ காலமாக நிலைத்து நிற்கிறது. இயற்கையின் செல்வங்களைப் பெற்றிருக்கிறது. ஆனால், அது எரிமலையாக இருந்தால், சமயத்தில் தீப்பிழம்பையல்லவா கக்குகிறது? அதன் உள் பகுதி வெடித்துச் சிதறுகிறதே! ஆதலால், கொள்கையை விடாமலே, அடக்கமாக உள்ளவனின் உயர்விற்கு, உயர்ந்த மலையும் இணையல்ல.

''நிலையின் இரியாது அடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப் பெரிது.

(''திருக்குறள் சிந்தனை'' எனும் நூலிலிருந்து)

பிறரின் வெற்றியில் நாம் மகிழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

# அத்வைதம் - விசிஷ்டாத்வைதம் - துவைதம் !

### அத்வைத தத்துவம்

அத்வைத தத்துவம் குறித்து ஆதிசங்கரர் தரும் சுருக்கமான விளக்கம் அற்புதமாகும். பிரம்மம் மட்டுமே உண்மையான பொருள். இந்த உலகம் ஒரு தோற்றமே. ''ஒவ்வோர் ஆன்மாவும் பிரமந்தான் வேறொன்றுமில்லை'' இது ஆதிசங்கரர் வாக்கு.

### வேறுபடாத ஆன்மா

பிரம்மம் என்ற மெய்ப்பொருள் ஒன்றே ஒன்றுதான் என்று அடித்துக் கூறுவது அத்வைத தத்துவத்தின் அடிப்படை; பிரமம் வேறு, ஆன்மா வேறு என்ற பிரிவினையை அத்வைத தத்துவம் ஏற்றுக் கொள்ளவில்லை. தவிரவும் நம் கண் முன் தென்படும் இந்த உலகமானது உண்மையற்ற ஒரு பொய்த் தோற்றம் எனவும் அத்வைத தத்துவம் விளக்கம் தருகின்றது. இவைதான் அத்வைத தத்துவத்தின் அடிப்படை உண்மைகள்.

> நாம் செய்யும் பணி எதுவானாலும் அதில் நல்லொழுக்கம், கொள்கைகளில் பிடிப்பு, மனப்பூர்வமான ஈடுபாடு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பக்திமார்க்கத்துக்கு இவை மிகமுக்கியம். நாம் செய்யும் நற்பணிகளுக்கும் இவை மிகவும் முக்கியமானவை. இப்படி நாம் ஈடுபட்டுச் செய்யும் ஒவ்வொரு பணியிலும் நமக்குப் பூரணமான நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும்.
>
> - சுவாமி சின்மயானந்தர் -

### தோற்றம்

சங்கரராய் (கி. பி. 788 — 820) என்பவர்தான் அத்வைத தத்துவத்தை முதலில் தொகுத்து எழுதினார். ஆனால் அந்தத் தத்துவத்தை அவர் யாருக்கும் உபதேசிக்கவில்லை. அது குறித்து பிரச்சாரம் ஏதும் செய்யவில்லை.

### உபதேசம்

உபதேசம் என்ற அடிப்படையில் அத்வைத தத்துவத்தைப் பரப்பத்தொடங்கியவர் கௌட பாதர் என்ற சமயப் பேரறிஞர். இவரையே ஆதிசங்கரர் தமது பரம குரு என்றும் சமய வழிகாட்டி என்றும் கூறிச் சிறப்பித்தார்.

### நூல்

கௌட பாதர் இயற்றிய 'மாண்டுக்ய காரிகை' என்ற நூலே அத்வைத தத்துவம் பற்றி தெளிவான விளக்கமான முதல் நூல் என்று கூறவேண்டும். இந்த நூலில் கௌடபாதர் அற்புதமான ஆன்மவியல் ஆராய்ச்சியே நடத்தியிருக்கிறார். விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று அனுபூதி நிலைகள் குறித்துத் தெளிவான ஆராய்ச்சி நடத்தி ஆன்மாவின் இருமையில்லாத நிலைக்கு விளக்கம் தருகிறார். உலகம் வெறும் மாயத்தோற்றமே என்பதற்கு அவர் தமது நூலில் ஏராளமான ஆதாரங்களைக் காண்பிக்கின்றார்.

நாளை என்ற பொழுது இன்னும் சில மணித்துளிகளில் நேற்றாகப் போய்விடும்.

## விசிஷ்டாத்வைதம்

ஆதிசங்கரருக்கும் பின் வந்த வேதாந்திகளின் ஆன்மீக சிந்தனை விளைவாகத் தோன்றிய தத்துவம் விசிஷ்டாத்வைதமாகும். முக்கியமாக இந்தத் தத்துவத்திற்கு உயிர் கொடுத்தவர் இராமானுஜர் (1017 — 1137) பிரம்மம் இருமையற்ற ஒரே பரம்பொருள் என்பதை இராமானுஜர் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் வேற்றுமையே இல்லாத ஒரு பொருளன்று என்கிறார் அவர். பல்வேறு குணங்களை உடைய ஒரு பொருளே பிரம்மம் என்பது இராமானுஜர் கருத்து.

## தத்துவம்

மூன்று முடிவான நிலை பொருட்களை (தத்துவ தரயம்) உண்டு என்பது விசிஷ்டாத்வைத முறையின் அடிப்படையாகும். அந்த மூன்று நிலைப் பொருட்கள் இறைவன் (ஈசுவரன்) ஆன்மா (சித்து), ஜடம் (அசித்து) ஆகியவையாகும். சார்பு அற்ற உட்பொருளாக இறைவன் மட்டுமே திகழ்கின்றான். ஆன்மா ஜடம் ஆகிய இரண்டும் இறைவனைச் சார்ந்தே உள.

ஆன்மா எனப்படும் சரீர், உடல் எனப்படும் சரீரத்துடன் தொடர்புகொண்டிருப்பது போன்று, ஆன்மாவினாலும் ஜடப் பொருளாலுமான உலகத்துக்கும், பரம் பொருளான இறைவனுக்குமிடையே தொடர்பு இருக்கின்றது. இறைவன் ஆன்மாக்களின் ஆன்மாவாகவும், இயற்கையின் ஆன்மாவாகவும் இருக்கின்றார். பின்னால் சொல்லப்பட்டவை இறைவனின்றும் வேறுபட்டவை. ஆனால் இறைவனை விட்டுப் பிரிக்க இயலாதவை.

## 'பிரபத்தி' என்னும் வழி

விசிஷ்டாத்வைதம் இறைவனை அடைவதற்கான நேர் வழியாக 'பிரபத்தி' என்னும் நடைமுறையைக் கையாள வேண்டும் என்று வற்புறுத்துகின்றது. இறைவனையே தஞ்சம் என்று கொண்டு முற்றிலுமாக அவனைச் சரணடைதல் என்பதே பிரபத்தியின் அடிப்படையாகும்.

## துவைதம்

மத்துவாச்சாரியர் (கி.பி. 1199-1278) என்ற சமயப் பேரறிஞரின் ஆன்மீகச் சிந்தனை உணர்வராவு கமாகத் தோன்றியது 'துவைதம்' என்ற சமயக்கொள்கை. மத்துவர் இராமானுஜரைப் போன்று விஷ்ணுவை இறைவன் என வரித்துக் கொண்டவர் என்றாலும், இவருடைய தத்துவக் கொள்கை இராமானுஜரின் கொள்கைக்குச் சற்று வித்தியாசப்படுவதாக இருக்கிறது. துவைதம் என்பது இருமைக் கொள்கையாகும். புற உலகத்தை ஒரேயடியாக ''மாயை'' என்று ஒதுக்கிவிடாமல் இறைவனைச் சார்ந்த ஒரு பொருள் என்று மத்துவர் கருதுகின்றார்.

## உட்பொருள்

ஒன்றுக்கொன்று வேற்றுமையுடன் உட்பொருள் திகழ்கின்றது, அதாவது உட்பொருள் பலவாகும் என்பதே துவைதத்தின் ஆதார தத்துவமாகும்.

கீழ்க்கண்டவாறு அந்த வேற்றுமை விளக்கப்படுகின்றது.

1. இறைவனுக்கும் ஆன்மாவுக்குமிடையே வேற்றுமை.
2. ஆன்மாவுக்கும் ஆன்மாவுக்குமிடையே வேற்றுமை.
3. ஆன்மாவுக்கும் ஜடப் பொருளுக்குமிடையே வேற்றுமை.
4. ஒரு ஜடப் பொருளுக்கும் மற்றொரு ஜடப் பொருளுக்குமிடையே வேற்றுமை.

நீங்கள் தனித்துவம் கொண்டவராக இருப்பதில் பெருமை கொள்ளுங்கள்.

வண்ணச்சரபம்

# தவத்திரு தண்டபாணி சுவாமிகள்

வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் 19 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுட் சிறந்தவர். தவச் சிறப்பிலும் உபாசனையிலும் உயர்ந்தவர். தமிழ்ப்பாக்களை இயற்றும் ஆற்றலை எட்டாவது வயதிலேயே கைவரப் பெற்றவர். இளமை முதல் வேற்பூசை, ஆறெழுத்தருமறை செபித்தல், தியானம் இவைகளில் மூழ்கியவர்.

செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் திருநெல்வேலியிற் சைவ வேளாளர் மரபில் 18. 11. 1839ல் தோன்றினார். இவருடைய பெற்றோர்கள் செந்தினயாகம் பிள்ளை, பேச்சிமுத்தாள் என்பார்கள் ஆவார். நீண்ட நாட்களாக மகப்பேறின்றியிருந்த தந்தையாரின் நான்காவது மனைவியாரிடம் காந்திமதியம்மையின் திருவருளால் இவர் தோன்றியபிறகு சித்திரபுத்திரர் என்ற தம்பியும் பிறந்தார்.

> நட்டகல்லைத் தெய்வம் என்று
> நாலுபுஷ்பம் சாத்தியே !
> சுற்றிவந்து முணுமுணென்று
> சொல்லு மந்திரம் ஏதடா !
> நட்டகல்லும் பேசுமோ
> நாதன் உள் இருக்கையில் !
> சுட்டசுட்டி சட்டுவம்
> கறிச்சுவை அறியுமோ ?
>
> — சித்தர் பாடல் —

நம் சுவாமிகள் எட்டு வயதளவில் சுரண்டை என்ற ஊரில் இருந்தபோது அவ்வூர் பூமிகாத்தாள் திருக்கோயிலில் திருவிழா நடந்தது. பலருக்கும் தெரியாமலிருந்த அத்தேவியின் பெயர்க்காரணத்தைக் கூறும்வகையில்,

> "அமுதம் கடையும்நாள் ஆலம்
> வெடித்துத்
> திமுதமெனத் தீயெரிந்துச் சென்றது,
> அமுதமெனத்
> திக்கடவுள் உண்டார் திருக்கண்டத்
> தைப் பிடித்துக்
> காத்ததனால் பூமிகாத் தாள்"

என்ற வெண்பாவை முதன் முதலாக இயற்றினார்.

முருகன் அருளால் அது முதலாகவே புதிய கவிகளை இயற்றவும், ஓலைச்சுவடிகளில் அவைகளை எழுதவும் தொடங்கினார். இங்ஙனம் நம் சுவாமிகள் இயற்றியவை சுமார் ஒரு லட்சமாகும். முருகன் மீதெழுந்த ஊடல் காரணமாக இவரே நீரிலும் நெருப்பிலும் இட்டு அழித்தவை போக இன்று சுமார் ஐம்பதாயிரம் பாடல்கள் எஞ்சியுள்ளன.

சூரியன், சிவன், சக்தி, திருமால், விநாயகன், முருகன் ஆகிய அறுசமய மூர்த்திகளுக்கும், சமயாதீதமான பொதுக் கடவுளுக்கும் பரத்துவம் கூறு முறையில் பற்பல நூல்களை இயற்றி அருளியுள்ளார். சந்தப்பாடல் முதல் எந்தப்பாடல் ஆனாலும் ஒரே தடவையில் பாடி ஓலைச்சுவடியில் எழுதுவது இவர் வழக்கம்.

மனம் கனிவதற்கு சோதனைகள் அவசியமானவை.

வரி வடிவம் கோணாமல், தனித் தனியே எழுத்தாக, அடித்தல் திருத்த லின்றிப் பனையோலைச் சுவடிகளில் நம் சுவாமிகள் அழகுற எழுதி வைத்திருப்பது வியப்பிற்குரியதாகும்.

''வண்ணம்'' என்பது அகப்பொருள் துறையில் சந்தக்குழிப்புடன் இயற்றப்படும் கவிதையாகும். இந்த யாப்பு எளிதில் இயற்ற முடியாதது.

இத்தகைய அரிய வண்ணங்களை நம் சுவாமிகள் ஓசை நயத்துடன் சொற்சிதை வின்றி எளிமையாகப் பாடும் சிறப்பு நோக்கி அக்காலப் பெரும் புலவர்கள் இவரை ''வண்ணச்சரபம்'' என வழங் கினர்.

கணக்கற்ற திருப்புகழ்ப் பாக்களை இயற்றியதால் ''திருப்புகழ்ச் சுவாமிகள்'' என்றும், இளமை முதலே முருகனின் தொண்டராக விளங்கியதால் ''முருகதாச சுவாமிகள்'' என்றும், முழுநீறு பூசி, காவிச் சிற்றுடை அணிந்து, விரித்தசிகை, கைத் தண்டு, உருத்திராக்கமாலை முதலியவற் றோடு விளங்கியதால் ''தண்டபாணி சுவாமிகள்'' என்றும் இவர் வழங்கப்பட் டார். பெற்றோர்களால் சூட்டப் பெற்ற இவரது இயற்பெயர் சங்கரலிங்கம் என்ப தாகும்.

சந்தத்திற்கெனத் தனி இலக்கண நூல் முன்னோரால் இயற்றப்பட்டமை கண்டு அதற்காக ''வண்ணத்தியல்பு'' என்ற சிறந்த புதிய இலக்கண நூலை இயற்றி னார்.

எழுத்து முதலாகிய ஐந்திலக்கணங் களையும் கற்பதால் உண்டாகும் புலமை எங்ஙனம் இருக்க வேண்டும் என்னும் புலமை இலக்கணத்தையும் இணைத்து ''அறுவகை இலக்கணம்'' என்னும் நூலை இயற்றினார். திருவாமாத்தூர் தலபுரா ணத்தை வடமொழியிலிருந்து தமிழாக்க[ம்] செய்தருளினார்.

தெய்வீக அருளும், புலமைச் சிறப்பு[ம்] மிக்க தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைத் தொகுத்து 72 சருக்கங்களில் சுமார் மூவா யிரம் பாடல் கொண்ட ''புலவர் புரா ணம்'' என்னும் காவியத்தையும் பாடி[ய] ருளினார்.

பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தா[தி] விஜயம், மாலை முதலிய எல்லா வகை

---

நாம் தெரிந்தோ தெரியாமலோ தண்ணீரில் விழுந்தாலும் நனைந்து தான் போவோம். நாம் கவனம் செலுத்தினாலும் செலுத்தாவிட்டா லும் அந்தத் தண்ணீர் நமது அழுக்கை அகற்றிவிடும். அதேபோலப் பகவானின் பெயரை நாம் தெரிந்து கொண்டோ, தெரியாமலோ உச்சரித் துக் கொண்டு வந்தாலும், பகவான் நமக்கு நிச்சயம் நன்மையைத் தருவான்.

காந்தத்தின் பக்கம் ஓர் இரும்புத் துண்டை வைத்தால், அந்த இரும் புத் துண்டைக் காந்தம் இழுத்துக் கொண்டுவிடும். மேலும் காந்தத்தின் மேலேயே பட்டுக்கொண்டிருக்கும்படி ஓர் இரும்புத்துண்டை வைத்துவிட் டால், அந்த இரும்புத்துண்டிற்கும் காந்தசக்தி ஏற்பட்டுவிடும். அதே போல தூய்மையாக பக்தியில் அறியா தபடி ஈடுபட்டிருந்தால்கூட, நம்மு டைய மனதுக்குத் தூய்மை தன்னால் வந்துவிடும்.

**ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மகாசுவாமிகள்**

---

**ஒவ்வொரு கணமும் உலகம் மாறிக்கொண்டேயிருக்கிறது.**

யான பிரபந்தங்களையும் இயற்றியவர் நம் சுவாமிகள். மருத்துவ முறையை விளக்கும் முறையில் ''வாகடப் பிள்ளைத் தமிழ்'' ஒன்றும் அருளிச் செய்துள்ளார். யமகம், திரிபு, சிலேடை, ஏகபாதம்' நிரோட்டகம் போன்ற சித்திரகவிதைகளையும் மிகப்பலவாக அருளியுள்ளார். நிரோட்டகம் என்னும் வடசொல் இதழ் குவியும் தன்மை உடையதாக இருப்பதால் அதனை ''இதழகல்'' எனப் புதுப் பெயரிட்டு அழைத்தார். இதற்கு நேர் மாறாக உதடுகள் ஒட்டியும் குவிந்தும் பிறக்கும் எழுத்துக்களை மட்டுமே கொண்டு ''குவிபா'' எனப் புதிய ஒரு வகை மிறைக்கவியை உண்டாக்கினார்.

வடலூர் வள்ளலார், வளவனூர் சண்முக சுவாமிகள், யாழ்ப்பாணம் மகாவித்வான் பிள்ளையவர்கள், வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முனிவர், அட்டாவதானம் கல்யாண சுந்தர யதீந்திரர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர் போன்ற பல பெரியோர்களோடு இவர் தொடர்பு கொண்டவர்.

முருகப் பெருமானைக் கண்ணெதிரே தரிசிக்க விழைந்த சுவாமிகள் பாண்டி நாட்டுத் திருமலை என்னும் தலத்தில் வேண்டினார். வேண்டுகோள் நிறைவேறப்பெறாத ஊடலால் அங்கு மலை மேலிருந்து கீழே உருண்டார். எனினும் உடலில் சற்றும் ஊனமின்றித் திருவருளால் காக்கப்பட்டார். ஒருமுறை வண்ணச்சரபம் சுவாமிகள் பாண்டிச்சேரியில் இருந்த போது ஒரு 'திருப்புகழ்மாலை' பாடினார். அன்றிரவே கந்தப்பெருமான் இவர் மனவெளியில் தோன்றி, ''உன்கவிதையால் என் முகங்களில் ஒன்றே மகிழ்ந்தது; மேலும் ஐந்து நூல்கள் இயற்றாவிட்டால் விடமாட்டேன்'' என்றருளிச் செய்த அவ்வாணையைச் சிரமேற்கொண்டு கலம்பகம் முதல் வேறு ஐந்து பிரபந்தங்களை இயற்றினார். முருகப்பெருமானின் ஆணைப்படியே சுந்தரத்தம்மை என்னும் மாதரசியை உருத்திராக்கமாலை அணிவித்து மனை

ஒவ்வொருவருக்கும் தனக்கு, குடும்பத்துக்கு, உறவினர்களுக்கு, சமூகத்துக்கு மனித சமுதாயத்துக்கு என்று ஐந்து விதமான கடமைகள் உண்டு. அவற்றுக்குத் தேவையான பணத்தைப் பகிர்ந்து செலவையும், மிச்சத்தையும் அளவுபடுத்த வேண்டும். மிச்சப்படுத்த வேண்டிய பணத்தில் ஓர் அளவையும், குறியீட்டையும் அடைந்த பிறகு, வரையறுத்து நிறுத்திக்கொள்ள வேண்டும். அதன் பிறகும் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு இருக்க முடியும். அதை மேலும் மேலும் சேமிப்பில் ஈடுபடுத்தக் கூடாது. அதைத் தனியார் மூலமாகவோ, அமைப்புக்களின் மூலமாகவோ, அரசாங்கத்தின் மூலமாகவோ எளியவர்களுக்குத் தந்து உதவ வேண்டும்.

அளவுக்கு அதிகமான செல்வம் தனி ஒருவரிடமோ, ஒரு குடும்பத்திலோ சேர்ந்துவிட்டால் அதனால் பண்புகளின் குலைவும், பிரச்சினைகளுமே ஏற்படும். அளவுக்கு அதிகமான செல்வம் பொதுநலத்துக்காக அளிக்கப்பட்டால். தேவை உள்ள எளிய மக்களுக்கு நன்மை ஏற்படும். சமூகத்தில் அமைதியும் மன நிறைவும் உண்டாகும்.

—யோகிராஜ் சுவாமி வேதாத்ரி மகரிஷி.

வெற்றி தோல்வி இரண்டிலும் சம பாவனை வேண்டும்.

வியாக ஏற்றார். கவுமார சமயத்திற்கு உரிய பற்பல சாத்திரங்களையும் அருளிச் செய்தார், தன் வாழ்க்கை வரலாற்றைக் ''குருபரதத்துவம்'' என்ற பெயரில் பாடி யிருக்கிறார்.

பல இசைத் தமிழ்ப் பாடல்களும், முசுகுந்த நாடகமும் இவருடைய படைப் புக்களில் உள்ளன. இவ்விதம் முத்தமிழி லும் இலக்கணம், சாத்திரம், தோத்திரம், சித்திரக்கவி, காவியம், மொழி பெயர்ப்பு, சுயசரிதை, மருத்துவம் முதலிய பல துறை களிலும் பற்பல நூல்களை அருளியிருக்கி றார். சுவாமிகள் தாமே ஏகபாத அந்தா திகளுக்கு உரை வகுத்து ஒரு சிறந்த உரை யாசிரியர் ஆகவும் விளங்குகிறார்.

உயிர்க்கொலை, புலால் உணவு எவ் வகையிலும் கூடாதென்ற தீவிரக் கொள் கையை உடையவரான சுவாமிகள் நடு நாட்டுச் சிவத்தலமான திருவாமத்தூரில் இறையருளாணையின் வண்ணம் எல்லை தாண்டா விரதத்துடன் தங்கித் தவம் புரிந்து 5. 7. 1898 – இல் அருட்சமாதி கொண்டார்.

தவத்திரு தண்டபாணி சுவாமிகளைக் குருவாகக் கொண்டவர்களில் தலை சிறந்து விளங்கியவர் சிரவையாதீன முதல் வராகிய தவத்திரு இராமானந்த சுவா மிகள் ஆவார்கள்.

தவத்திரு தண்டபாணி சுவாமிகள் சமாதி கோயில், நூல்களமைந்த ஏட்டுச் சுவடிகள், கவுமார மடாலயம் ஆகியன சுவாமிகள் பரம்பரையினரால் காக்கப் பெறுகின்றன. ★

விவேகத்தோடு நடத்தும் குடும்ப வாழ்க்கைக்கு பொருளைச் செலவு செய்வதனால் குற்றம் ஒன்றும் இல்லை. ஆனால் பணம் சம்பாதிக் கிற வழி நல்லதாக இருக்க வேண் டும், நியவழியில் ஒருபோதும் பிரவே சிக்கலாகாது. குடும்ப சம்ரட்சணை தலைவனுடைய உதவி இல்லாமலே நடப்பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு திரவியம் சம்பாதிக்கலாம்.

குழந்தைகள் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டால், அப்புறம் இந் தக் கடமை தீர்ந்து போய்விடுகிறது. உண்ண உணவுக்கும். உடுக்க உடைக் கும், குடும்ப சம்ரட்சணைக்கும், பகவத் பூஜைக்கும், சாதுக்கள் சேவைக்கும் பணம் சம்பாதிக்க வேண்டும். அது அவசியம்தான். ஆனால் அளவுக்கு அதிகமாகப் பொருள் திரட்டுவது அவசியம் இல்லை. அது அனாவசியமான துன் பத்தையே தரும்.

மசாலா கலந்த ஊறுகாயை நினைத்தாலே நாவில்நீர் ஊறுகிறது. அதனைக் கண்ணால் பார்க்கும் போதும் தொடும் போதும் ஏற்படும் கவர்ச்சியைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

ஆனால் இந்தக் கடுமையான நிபந்தனைகள் கிருகஸ்தர்களுக்கு உரியதல்ல. சில குழந்தைகள் பிறந்த பிறகு கணவனும் மனைவியும் சகோ தரனையும் சகோதரியையும் போல பழக வேண்டும். படிப்படியாகக் கவ னத்தைக் கடவுள்பால் திருப்பி இடைவிடாது பகவானைப் பிரார்த் திக்க வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

வாழ்வில் உயர்வு என்பது நமது மனதின் பக்குவத்தைப் பொறுத்தது.

# குருபக்தி

(திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்)

பக்தி மூன்று வகைப்படும். இறைவனுக்கு நேராகச் செய்யும் பக்தி இறை பக்தி; அடியார்களுக்குச் செய்யும் பக்தி அடியார் பக்தி; ஆச்சாரியாரிடம் செய்யும் பக்தி குருபக்தி. சுருக்கமாகச் சொன்னால் சிவபக்தி, ஜங்கம பக்தி, குருபக்தி என்று சொல்வார்கள்.

இந்த மூன்றிலே மிகவும் சிறந்தது குருபக்தி. ஆண்டவன் கருணை எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறது; இவ்விடத்தில் இறைவனுடைய கருணை இல்லை என்று சொல்ல முடியாதபடி எங்கும் பரந்தும் விரிந்தும் இருக்கிறது.

> பக்திப் பெருக்கில் தயக்கத்துக்கும் கூச்சத்துக்கும் இடம் ஏது? தன்னை மறந்து குரல் கொடுத்து வாய்விட்டுப் பாடுங்கள். இறை உணர்வு ஆட்டி வைக்கும்போது மெய் மறந்து போகும். உடல் அலைபாய்வதும், உள்ளம் ஆனந்தக் கடலில் மிதப்பதும் உங்களுக்குப் பரமானந்த அனுபவமாக இருக்கும். கண்மூடி, கரங்கள் சேர, அங்கை தாளமிட, ஆடிப் பாடி அனுபவியுங்கள். ஏனெனில் அந்தவேளையில் இறைவன் உங்கள் உள்ளத்தில் நர்த்தனமாடுகிறான். அவன் வேறு - நீங்கள் வேறல்ல!
>
> — பகவான் சாயி பாபா —

அந்தக் கருணையைப் பெறவேண்டுமானால் ஆச்சாரியார் மூலமாகத்தான் சுலமாகப் பெறமுடியும். 120 பாகை சூடுடைய வெயில் கடுமையான வெயில். அதில் ஒரு வேஷ்டியை வைத்தால், சுடுமே தவிர எரிந்து வெந்து போகாது. சூரிய காந்தக் கண்ணாடி என்ற ஒன்று உண்டு. அந்தச் சூரியகாந்தக் கண்ணாடியை வெயிலில் வைத்து அதன்கீழ் வருகிற வெயிலில் வேஷ்டியை வைத்தால் தீ உடனே பற்றிக் கொள்ளுகின்றது. நேராக வரும் வெயில் மாதிரி இறைவனைக் குறித்துச் செய்யும் பக்தி, சூரியகாந்தக் கண்ணாடியின் கீழ் வருகின்ற வெயில் மாதிரி குருபக்தி.

குருநாதர் பல வருடங்கள் தவம் செய்து அந்தத் திருவருளைச் சேர்த்து வைத்திருக்கிறார். அதனைத் தன் சீடனுக்குப் பாய்ச்சி விடுகிறார். 'ஆகையினால் தான் சிவபக்தியைக் காட்டிலும் குருபக்தியே சிறந்தது' என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். அருணகிரிநாதர் மிகப் பெரியவர். அவர் ஐம்பத்தொரு அனுபூதிப் பாடல்களைப் பாடினார். மந்திர சாத்திரமாக ஐம்பத்தொரு அட்சரங்களுக்கும் ஐம்பத்தொரு அனுபூதிப் பாடல்களைப் பாடினார். அதில் கடைசிப் பாட்டு, கடைசி வரியாக வருவது,

''குருவாய் வருவாய் அருள்வாய்
குகனே''

என்பது. ஆண்டவனைக் குருவாக வந்து அருள் செய்யுமாறு சொல்கிறார். மணி

நமது முயற்சிக்கு எப்போதும் இயற்கையின் துணை உண்டு.

வாசகருக்கு எம்பெருமான் குருநாதராக வந்தார். குருந்த மரநிழலில் திருப்பெருந்துறையில் குருவாக எழுந்தருளினார். இறைவன் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் குருநாதனாக வருவார்.

குருவும் நம்மைப்போலத்தான் உண்டு, உடுத்து இருப்பார். அவரை நம்மைப் போல நினைக்கக்கூடாது. எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிலே தோன்றிய எல்லாப் பிராணிகளும் உண்டு வெளியே வந்தால் மலம் என்று பெயர். ஒரு பிராணி மட்டும் உண்டு கழித்தது மலம் என்று பெயரில்லை. அது புனிதமானது. அதுதான் பசுவின் சாணம். பூசை செய்யும் வீட்டை அதைக்கொண்டு மெழுகுகிறோம், சுவாமிக்கும் பஞ்சகவ்வியமாக அபிஷேகம் பண்ணுகிறோம். திருநீறு பசுவின் மலத்தால் ஆனது. குழந்தைகள் வெளிக்குப்போனால் அந்த இடத்தை பசுவின் சாணிகொண்டுதான் சுத்தப்படுத்துகிறோம். ஆகையினாலே பிற மலங்களைப் போக்குவதற்காக அமைந்தது பசுவின் மலம். குருநாதனுடைய உடம்பு பசுவின் மலம்போல நம்முடைய கருமேனியைச் சுத்திகரிக்க வந்தது குருநாதரின் திருமேனி. ஆகவே, நம்மைப் போலத்தானே அவரும் இருக்கிறார் என்று எண்ணிவிடக்கூடாது.

தெய்வத்தினிடம் செய்த பாவம் ஆச்சாரியனுடத்துத்தீரும். ஆச்சாரியனிடத்துச் செய்த பாவம் எங்கும் நீங்காது, அதற்கு முடிவே கிடையாது. ஆகவே, சிவபக்தியைக் காட்டிலும் குருபக்தியே உயர்ந்தது.

ஆச்சாரியன் ஞானத்தின் சொரூபம். ஞானம் எங்கேயாவது கடையிலே விற்குமா? தங்கத்தை விலைக்கு வாங்கலாம்; துணிகள் வாங்கலாம்; நிலம் வாங்கலாம்; பங்களாவாங்கலாம்; கார் வாங்கலாம். ஞானத்தை எங்கேயாவது விலைக்கு வாங்க முடியுமா? அந்த ஞானத்தைக் கொடுப்பவர்தான் குருநாதர்.

துன்பதிற்குக் காரணம் அஞ்ஞானம். இன்பத்திற்குக் காரணம் ஞானம். அஞ்ஞானம் இருக்க இருக்கத் துன்பம் இருக்கும். அஞ்ஞானத்தைப் போக்குபவர் குருநாதர். ஞானத்தைக் கொடுப்பவர் ஞானகுருநாதர். எல்லோருக்கும் குருபக்தி அவசியமாகும். குருநாதரை நினைக்க வேண்டும்; வணங்க வேண்டும்; குருநாதர் இருந்த திசை நோக்கிப் பக்தி செய்ய வேண்டும்; குருபக்தி ஒன்றே எல்லாம் அளிக்கவல்லது.

நாம் செய்யும் பணி யாருக்காக இருந்தாலும், அது இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது என்ற நினைவு நமக்கு இருக்கவேண்டும். அப்போது நாம் நம்முடன் சேர்ந்து பணிபுரிபவர்களையும் சமநிலையில் வைத்துப் பழகும் பண்பைப் பெறுவோம். பொறாமை, கோபம், போட்டியில் வரும் வெறுப்பு ஆகியவை நம்மைப் பாதிக்காது. பக்திப்பணியில் பலரும் சமமாகச் சேருவதைப் போல எல்லோரும் ஒன்றி உழைப்பை நல்கினால் விளைவுகள் கூட்டு மொத்தமாகக் கிடைக்கும். எல்லோருக்கும் அதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டாகும்.

– சுவாமி சுத்தானந்தா –

பக்கங்களின் அடியிலுள்ள அருள்மொழிகள் பிரம்மகுமாரி இராஜயோக நிலையத்தாரின் ''இன்றைய சிந்தனை'' என்ற நூலிலிருந்து திரட்டப்பட்டவை.



லண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வர் தவத்திரு சிவநந்தி அடிகளார் இராஜாங்க அமைச்சுக்கு விஜயம் செய்த போது இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவித்தபின் திணைக்கள நூற்தொகுதி ஒன்றை வழங்குவதையும், இராஜாங்கச் செயலாளர் திரு. கா. தயாபரன் மலர்மாலையிட்டு வாழ்த்துவதையும் படத்திற் காணலாம்.



தமிழ் நாடக விழாவின் போது இடம் பெற்ற "தோட்டத்து ராஜாக்கள்" எனும் நாடகத்தில் ஒரு காட்சி

***அட்டைப்படம் :***

சென்னை தேசிய கலையகத்தில் உள்ள அக்கினிக் கடவுளின் வடிவம்.
11ம் நூற்றாண்டுச் சிற்பம்
(இண்டியன் மைதோலோஜி எனும் நூலிலிருந்து)

படங்கள் உதவி : எஸ். மயூரன்.

# இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் விற்பனைக் கருமபீடத்தில் விற்பனைக்குள்ள நூல்கள்

★ **தாயுமான சுவாமிகள் திருப்பாடல்** — ரூபா - 200.00

(மூலமும் பொழிப்புரையும்)
தாயுமான சுவாமிகள் பாடல்கள் தெளிவான பொழிப்புரையுடன் தரப்பட்டுள்ளன. செங்கலடி, சிவதொண்டன் நிலைய வெளியீடு.

★ **இலக்கியத் திறனாய்வியல்** — ரூபா - 117 .00

இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள் பற்றிய விளக்கநூல். ஆசிரியர் தா. ஏ. ஞானமூர்த்தி. ஐந்திணைப்பதிப்பக வெளியீடு

★ **மணிவாசகர்** — ரூபா - 100.00

முதுபெரும்புலவர் அ. மு. சரவணமுதலியார் அவரது புதல்வர் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் ஆகிய இருவரதும் சொற்பொழிவுகளின் தொகுப்பு, சென்னை காந்தளகம் வெளியீடு.

★ **இந்திய வரலாறு** — ரூபா - 200.00

டாக்டர் ந. சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய இந்நூல் இந்தியாவின் அரசியல், சமூக பண்பாட்டு வரலாற்றினை விளக்குகின்றது. நியூசெஞ்சரி புக் ஹவுஸ் வெளியீடு.

★ **பண்டைய தமிழகம்** — ரூபா - 375.00

தொல்லியல் சான்றுகளுடன் விஞ்ஞான ரீதியாக பண்டைய தமிழக வரலாறு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நூலாசிரியர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்களாவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

★ **யாழ்ப்பாண சரித்திரம்** — ரூபா - 487.00

முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் எழுதியது. 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்நூல் மீள் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வரலாறு பற்றி இந்நூல் வெளிவந்த ஆறு தசாப்த காலத்தில் பல நூல்கள் தோன்றின. புதிய நோக்கு நிலை வளர்ச்சியுற்றன. ஆயினும் முதலியார் இராசநாயகத்தின் முன்னோடி ஆய்வு இலங்கையின் வரலாற்று வரைவியல் (Historigraphy) வளர்ச்சியில் தனித்துவம் மிக்கது. நூலகங்களில் பேணப்பட வேண்டிய அரிய நூல்.

இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன கருமபீடத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Printed by : Rajan Printers, Colombo - 2.